# "தூர தேசத்தில்"

## (1 சாமுவேல் 27–2 சாமுவேல் 2)

*உலக முழுவதிலும் நன்கு அறியப்பட்ட ஒரு சிறுகதையானது, பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகின்றது:*

> *"ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: 'தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும்' என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான். சில நாளைக்குப் பின்பு, இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூர தேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான். எல்லாவற்றையும் அவன் செலவழித்தபின்பு, அந்தத் தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று, அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி, அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான்; ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை" (லூக். 15:11-16).*

*இந்த இளைஞன் ஏன் வீட்டை விட்டுச் சென்றான்? ஒருவேளை இவன் தன் தகப்பனால் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை விரும்பாமல் இருந்திருக்கலாம். ஒருவேளை இவன் தன் வேலை மற்றும் பொறுப்புகளினால் களைப்படைந்து போயிருக்கலாம். ஒருவேளை இவன் உலகத்தைக் காண விரும்பியிருக்கலாம். காரணம் எதுவாயிருப்பினும், இவன் தூர தேசத்திற்குச் சென்றான், அதன் விளைவு அழிவுக்குரியதாக இருந்தது.*

*நான் இந்தப் பழக்கமான கதையை நினைக்கையில், இந்த ஊதாரி மகனின் உதாரணத்தைப் பின்பற்றுகிற பல்லாயிரக்கணக்கானவர்களைக் குறித்துச் சிந்திக்கின்றேன். தேவபக்தியுள்ள பெற்றோர்களால் வளர்க்கப்பட்ட ஆண்களும் பெண்களும், தங்கள் வாழ்வில் தாங்கள் எதையோ இழந்து விட்டதாக எண்ணி, பாவம் என்ற தூர தேசத்திற்குச் செல்லுவதை நான் நினைத்துப் பார்க்கின்றேன். ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான இளைஞர்களும் இளம் பெண்களும் தங்கள் இல்லங்கள் மிகவும் கண்டிப்புள்ளவையாக இருக்கின்றன என்று முடிவு செய்து, இல்லத்திலிருந்து வெளியே ஓடி (அதினால்) தங்கள் பெற்றோர்களின் இருதயங்களை உடையச் செய்து விடுகிறதை நான் நினைத்துப் பார்க்கின்றேன். போதைப் பொருட்களினாலும், மதுபானத்தினாலும் வாழ்வில் தங்களுக்கான*

*திட்டத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று நம்புகின்றவர்களை நான் நினைத்துப் பார்க்கின்றேன்.*

*இளைஞர்களும் இளம் பெண்களும் மாத்திரம்தான் தூர தேசத்திற்குத் தப்பிச் செல்ல விரும்புகின்றவர்களாயிருக்கின்றார்கள் என்பது கிடையாது. தங்கள் திருமணத்தில், வலையில் அகப்படுத்தப்பட்டதாக உணருகின்ற கணவர்களும் மனைவியர்களும் தங்கள் துணைவரை/துணைவியை விட்டுச் சென்று தங்கள் வாழ்வைப் பேரழிவுக்கு உள்ளாக்கியிருக்கின்றார்கள். தந்தையர்களும் தாய்மார்களும் தங்கள் பெற்றோர்த்துவப் பொறுப்புக் களினால் இளைப்படைந்து தங்கள் குடும்பங்களைக் கைவிட்டுச் செல்லுகின்றார்கள். ஒருநாள் காலை வேளையில் விழித்தெழுகின்ற கிறிஸ்தவர்கள், "வாழ்வின் எல்லா கேளிக்கைகளும் இல்லாமல் போய் விட்டதே" என்று நம்பி, அவர்கள் இவ்வுலகத்தின் வாழ்வுப் பாணியைத் தழுவுகின்ற பொழுது, அது நமக்கு அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. பிரசங்கியார்கள், மூப்பர்கள், மற்றும் உதவிக்காரர்கள் ஆகியோர் தங்களின் தேவபக்தியற்ற தன்மை வெளிப்படுத்தப்படும்போது, சபையை மோசத்துக்கு உள்ளாக்குகின்றார்கள்.*

*நம்மில் எவரும் (இவ்விதமான மோசம் போகுதலில் இருந்து) பாதுகாப்புப் பெற்றவர்களாயிருப்பதில்லை. கிறிஸ்துவின் சரீரம் என்ற வகையில், நாம் நன்மை செய்வதில் "சோர்ந்து போய்" (கலா. 6:9), செயல் படாமல் இருப்பது என்னும் தூர தேசத்திற்குள் சென்று விட முடியும். ஊதாரி மகன் என்பவன் மாத்திரமே, கீழ்ப்படியாமை என்ற தூர தேசத்திற்குச் சென்று, தன் ஆதாரமூலங்கள் யாவற்றையும் இழந்து போன முதலாவது அல்லது கடைசியானவனாக இருப்பதில்லை. அல்லது அவன் (அதற்கான) விளைவுகளை அறுவடை செய்யும் முதலாவது அல்லது கடைசியானவனாக இருப்பதில்லை.*

*ஊதாரி மகனின் கதையை நான் ஆழ்ந்து சிந்திக்கையில், தாவீதைப் பற்றியும் அவரது வாழ்வின் அந்நியமான, இயல்புக்கு மிகவும் மாறான வாழ்வைப் பற்றியும் நான் நினைத்துப் பார்க்கின்றேன்: இது அவர் பெலிஸ்தியர்களுடன் வாழ்ந்திருந்த பதினாறு மாத காலமாக உள்ளது. நமது முந்திய பாடத்தில் நாம் தாவீது இரண்டாம் முறையாக சவுலின் உயிரைத் தப்ப விட்ட நிகழ்ச்சியை எடுத்துரைக்கும் 1 சாமுவேல் 26ம் அத்தியாயத் தைப் படித்தோம். அத்தியாயம் 27, பின்வருமாறு தொடங்குகின்றது:*

> *பின்பு தாவீது: "நான் எந்த நாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்; இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லை களில் எங்கேயாவது என்னைக் கண்டுபிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகும்படிக்கும், நான் அவனுக்கு நீங்கலாயிருக்கும் படிக்கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய், தப்பித்துக் கொள்ளுவதைப்பார்க்கிலும் நலமான காரியம் வேறில்லை" என்று தன் இருதயத்தில் யோசித்தான். ஆகையால் தாவீது தன்னோடிருந்த அறுநூறுபேரோடுங் கூட எழுந்திருந்து, மாயோகின் குமாரனாகிய ஆகீஸ் என்னும் காத்தின் ராஜாவினிடத்தில் போய்ச் சேர்ந்தான். அங்கே தாவீதும், அவன் மனுஷரும் அவரவர் வீட்டாரும் ... காத்*

*பட்டணத்தில் ஆகீசிடத்தில் தங்கியிருந்தார்கள் (வ. 1-3).*

*தாவீது முதலில் ஓடத்தொடங்கிய போது, அவர் காத்தின் அரசனா யிருந்த ஆகீசிடம் புகலிடம் நாடியிருந்தார். பின்பு தாவீது பைத்தியம் கொண்டவர் போல் நடித்து, மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார் (1 சாமு. 21:10-15). இப்பொழுது ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் கடந்து போயிருந்தன, சூழ்நிலைகள் மாறியிருந்தன. தாவீதின் மீது சவுல் வெறுப்புற்று இருந்தது நன்கு அறியப்பட்டிருந்தது. மேலும் தாவீது தம்முடன் கணிசமான படையொன்றைக் கொண்டு வந்திருந்தார், அதை ஆகீசின் உத்தரவுப்படி செயல்படச் செய்ய முன்மொழிந்தார். இந்த வேளையில் தாவீது காத் நகரத்தில் மாறுபட்ட வரவேற்பைப் பெற்றார், எனவே அவரும் அவரது மனிதர்களும், அவர்களின் குடும்பங்களும் பெலிஸ்தியாவில் தங்கியிருந்தார்கள். "தாவீது பெலிஸ்தரின் நாட்டிலே ஒரு வருஷமும் நாலு மாதமும் குடியிருந்தான்" (27:7).[1]*

*இது எவ்வளவு முரண்பாடானது என்பதை நாம் மதிப்பிடுவதற்கு, பெலிஸ்தியர்கள் யார் என்பதையும், தேவனுடைய மக்களுக்கு அவர்கள் எவ்வளவாக மரணத்திற்கேதுவான விரோதிகளாய் இருந்தார்கள் என்பதை யும் நாம் புரிந்து கொள்வது அவசியமாகும். (பெலிஸ்தர்கள் பற்றிய அதிகமான விவரங்களை இப்புத்தகத்தில் உள்ள துணைப்பாடத்தில் அறிந்து கொள்ளவும்.) இவர்கள் இஸ்ரவேல் நாட்டின் தென்மேற்குப் பகுதியில், மத்திய தரைக் கடலில் கரையோரப் பகுதியில் கானான் தேசத்தில் வாழ்ந் திருந்தார்கள் ... (பக்கத்தில் உள்ள வரைபடத்தைக் காணவும்). இவர்கள் விக்கிரகாராதனைக்காரர்களாயிருந்து, தாகோன் (பாதி மனிதனும், பாதி மீனின் உருவமும் கொண்ட சிலை) (1 சாமு. 5:2), மற்றும் அஸ்தரோத் (1 சாமு. 31:10) ஆகியவற்றை ஆராதித்து வந்தார்கள். பெலிஸ்தியரின் நாடு (இஸ்ரவேலரின் நாட்டுடன் ஒப்பிடுகையில்) சிறியதாக இருந்தாலும் (யோசு. 13:2 முதல்), வியூகத்துவமாக இடம் பெற்றிருந்த அவர்களின் வர்த்தக மையங்கள் பெருந்திரளான மக்களை ஆதரித்து வந்தன, அவர்கள் வலிமை மிகுந்தவர்களாகவும் செல்வாக்குள்ள மக்களாகவும் விளங்கினார் கள் (1 சாமு. 13:5ஐ கவனிக்கவும்).*

*இஸ்ரவேல் மக்களை யோசுவா கானானுக்குள் வழிநடத்திக் கொண்டு வந்தபோது, அவர்கள் பெலிஸ்தரின் பெருநகரங்களை வெற்றி கொள்ளவும் கட்டுப்படுத்தவும் முடியாதிருந்தது.[2] நியாயாதிபதிகளின் காலமாகிய துன்பம் மிகுந்த வேளையில், இஸ்ரவேலின் தென்பகுதியை மீண்டும் மீண்டும் பெலிஸ்தர்கள் கைப்பற்றியிருந்தார்கள் (நியா. 10:6, 7; முதலியன). ஒருமுறை இவர்கள் இஸ்ரவேல் நாட்டின் மீது நாற்பது ஆண்டுகள் ஆதிக்கம் செலுத்தினார்கள் (நியா. 13:1). பெலிஸ்தரின் குணங்களில் சிலவற்றைப் புரிந்து கொள்ள, பெலிஸ்தியர் அழகியான தெலிலாளின் (இ.வ. நியா. 16:4, 5) சூழ்ச்சியையும், சிம்சோன் தமது பெலத்தை இழந்த பின்பு அவர் மீது பெலிஸ்தர்களால் சுமத்தப்பட்ட கொடூரமான பரியாசத்தையும் நினைத்துப் பாருங்கள்.*

*சாமுவேலின் நாட்களில், தேவனுடைய மக்கள் மீது பெரும் வெற்றி*

*கொண்ட பெலிஸ்தர்கள், இஸ்ரவேலரின் மதத்தினுடைய மிகவும் பரிசுத்த மான அடையாளமான (உடன்படிக்கைப்) பெட்டியைக் கைப்பற்றினார் கள். பெலிஸ்தர் அந்தப் பெட்டியை அஸ்தோத்து என்ற இடத்திற்குக் கொண்டு போய், அதை ஏளனப்படுத்தும் வகையில் தாகோனின் கோவிலில் வைத்தார்கள்.[3] சவுல் அரியணையில் ஏறியபோது, பெலிஸ்தர்கள், யூதேயா வின் மையப்பகுதியில் இருந்த கிபியா என்ற இடத்தில் ஒரு பாதுகாப்புப் படையை(தாணையத்தை)க் கொண்டிருந்தார்கள் (1 சாமு. 10:5), அங்கிருந்த அவர்கள் இஸ்ரவேலர்களை எல்லாத் திசைகளிலும் கொள்ளை யிட்டுக் கொண்டிருந்தார்கள் (1 சாமு. 13:16-18). நமது பாடத்தொடரில் நாம், பெலிஸ்தருடன் (இஸ்ரவேலர்களின்) போராட்டங்களில் ஒரு சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளோம். இந்தப் பாடத்தொடர் முடிவதற்குள் நாம் இன்னும் அதிகமானவற்றைக் காண்போம்.*

*பெலிஸ்தர்கள் தங்கள் வழிமுறையில் முற்றிலுமாகச் செயல்பட்டிருந் தால், தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்கள் முற்றிலுமாக அழிந்து போயிருப்பார்கள், யெகோவாவின் நாமம் ஒருக்காலும் மீண்டும் உச்சரிக்கப்பட்டு இருந்திருக்காது. தாவீது, இந்தப் புறத்தெய்வ வணக்கம் கொண்ட, தேவபக்தியற்ற, விக்கிரகாராதனைக்காரரான மக்களிடத்தில் சென்று வசிக்கத்தொடங்கினார் என்பது சிந்தைக்கு திகைப்பூட்டுவதாக உள்ளது. இருப்பினும், அவர் இதையே மிகச் சரியாக செய்தார். ஊதாரி மகன் பற்றிய உவமையை இயேசு கூறுவதற்கு ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக, தாவீது "தூர தேசத்திற்குப் பயணமானார்" - இது புவியியல் ரீதியாக தூரதேசமாயிருந்தது இல்லை, ஆனால் ஒழுக்க ரீதியாக, ஆவிக்குரிய வகையில், மற்றும் இறையியல் சார்ந்த வகையில் தூரதேசமாயிருந்தது. இது போலவே சில வேளைகளில் நாமும், நமக்குப் போதிக்கப்பட்டவற்றினின்று தூரமாக உள்ள, நாம் விசுவாசித்து இருப்பவைகளிடத்தினின்று தூரமாக உள்ள, நமது முந்திய வாழ்க்கை முறைகளினின்று தூரமாக உள்ள "தூர தேசத்திற்குப் பயணத்தை மேற்கொள்கின்றோம்."*

*இந்தப் பாடத்தில் நாம் பின்வரும் மூன்று கேள்விகளைக் கேட்க விரும்புகின்றோம்: (1) தாவீது இதைச் செய்தது ஏன்? (2) இதன் விளைவுகள் என்ன? (3) தாவீதினால் திரும்பி வர முடிந்தது எப்படி? ஒருவேளை நாம் ஏன் தூரதேசத்திற்குச் செல்லுகின்றோம் என்பது பற்றியும் - மற்றும் நாம் எவ்வாறு திரும்பி வர முடியும் என்பது பற்றியும் - நாம் சில புரிந்து கொள்ளுதல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.*

## போனதற்கான காரணங்கள்
## *(1 சாமுவேல் 27:1-3)*

*"தாவீது பெலிஸ்தர்களுடன் குடியிருக்கச் சென்றது ஏன்?" என்பது நாம் கேட்க வேண்டிய முதல் கேள்வியாக உள்ளது. அவர் சவுலிடமிருந்து புறம்பே செல்ல விரும்பினார் என்பது இதற்குத் தெளிவான பதிலாக உள்ளது (27:1).[4] அந்தக் கருத்தமைவிலிருந்து காணுகையில், தாவீதின் முடிவு உலகப் பிரகாரமான தந்திரம்/சூழ்ச்சியொன்றைக் கொண்டதாக இருந்தது.*

*தாவீது சவுலை விட்டுப் புறம்பே சென்றார் (27:4). அவரும் அவரது குடும்பமும் முதல் முறையாக தொடர்ந்து ஓடிக் கொண்டேயிராமல், ஒரு சாதாரணமான வாழ்வை வாழ முடிந்தது.*

*இருப்பினும், 27:1ன் மீது விளக்கவுரை அளிக்கும் ஒரு எழுத்தாளர், "தாவீது தமது விசுவாசத்தில் இருந்து வீழ்ந்து போனார் ... மற்றும் ... இஸ்ரவேலின் எல்லைகளுக்குப் புறம்பே பாதுகாப்பை நாடும்படிக்கு வற்புறுத்தப் பட்டார்" என்று கூறினார்.[5] இந்த நிகழ்ச்சியை நான் எவ்வளவு அதிகமாய்ப் படிக்கிறேனோ, அவ்வளவு அதிகமாக இந்த விளக்கம் மிகச் சரியானது என்று நான் நம்பி ஏற்கின்றேன். பின்வரும் உண்மைகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்: தாவீது அடுத்து இராஜாவாவார் என்று தேவன் அவருக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார். தாவீதுடன் கூடவே இருப்பதாக தேவன் அவருக்கு வாக்குத்தத்தம் செய்திருந்தார். யோனத்தான், சவுல் மற்றும் அபிகாயில் ஆகிய அனைவரும் தாவீது அடுத்த இராஜாவாவார் என்று நம்பினார்கள். சவுல் ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகளாகத் தாவீதைத் துரத்தியும், "தேவன் அவனை [தாவீதை] அவன் [சவுல்] கையில் ஒப்புக் கொடுக்கவில்லை" (1 சாமு. 23:14) என்பதால் அவரைப் பிடிக்க முடியாமல் இருந்தார்.*

*இவையெல்லாவற்றையும் தாவீது அறிந்திருந்தார். அவர் அடிக்கடி தமது வாழ்வில் நடந்த எல்லாவற்றிலும் தேவனுடைய கரம் தம்முடன் இருந்ததாகக் குறிப்பிட்டார். தாவீது என்றேனும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்து போக மாட்டார் என்பதை நிரூபிப்பதற்கு இன்னும் கூடுதலாக தரப்பட்டிருக்கக் கூடிய வேறு ஆதாரம் எதுவாகிலும் இருக்க முடியுமா (27:1)?*

*இருந்தபோதிலும், ஓய்வற்ற ஒரு இரவுக்குப் பின்பு மேகம் சூழ்ந்த, கவலை மிகுந்த ஒரு காலைவேளையில் தாவீது விழித்தெழுந்த நிலையை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது. அவர், குளிர்ந்த ரொட்டியும் வெள்ளாட்டுப் பாலாடைக் கட்டியும் அடங்கிய தமது காலை உணவைக் குனிந்தவாறே உண்கையில், தமது முகாமின் ஒழுங்கற்ற தன்மையையும் தமது மனைவியர்களின் தளர்வுற்ற முகங்களையும் பார்த்து, "நாம் இப்படியே எந்த வேளையிலும் சவுலின் படையினர் வந்து நம்மேல் விழுந்து நம்மை நொறுக்கி விடுவார்களோ என்று (பயத்துடன்) எதிர் பார்த்துக் கிடக்க முடியாது. இது வாழும் வழியல்ல. நான் இறந்தொழியும் வரையிலும் சவுல் ஒருக்காலும் மகிழ்ச்சியடைய மாட்டார்'' என்று நினைத்திருப்பார். அவர் கூச்சத்துடன் மேற்கு நோக்கிப் பார்த்து, "நமக்கு வேறு வழியில்லை. நாம் இந்த நாட்டை விட்டு வெளியேறி விட வேண்டும்" என்று நினைத்திருப்பார். தமது காலத்திற்கு முன்பே முதிர்வயதாகி விட்ட ஒரு மனிதரைப் போல, அவர் மெதுவாக எழுந்து, தமது முகாமில் இருந்தவர்களுக்கு புறப்படும்படி கட்டளை கொடுத்தார்.*

> *பின்பு தாவீது: ''நான் எந்த நாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்; இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளில் எங்கேயாவது என்னைக் கண்டுபிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகும்படிக்கும், நான் அவன் கைக்கு நீங்கலாயிருக்கும் படிக்கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப்போய், தப்பித்துக்*

*கொள்ளுவதைப் பார்க்கிலும் நலமான காரியம் வேறில்லை என்று தன் இருதயத்தில் யோசித்தான்" (27:1).*

*"தாவீது ... தன் இருதயத்தில் யோசித்தான்"* என்பதைக் கவனியுங்கள். தாவீது தேவனுடைய சித்தம் என்ன என்பது குறித்து அவரிடம் விசாரிக்க வில்லை; தாவீது தமக்குள்ளாகவே யோசித்துக் கொண்டார் அடுத்த படியாக, தாவீதின் சிந்தனைகள் சுயத்தைப் பற்றியிருந்தன என்பதைக் கவனியுங்கள்: *"நான் எந்த நாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்து போவேன்; இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளில் எங்கேயாவது என்னைக் கண்டு பிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப் போகும்படிக்கும், நான் அவனுக்கு நீங்கலாயிருக்கும்படிக்கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய், தப்பித்துக்கொள்ளுவதைப் பார்க்கிலும் நலமான காரியம் வேறில்லை."* உங்கள் சிந்தனைகள் சுய - மையம் கொண்டதாகும் போது, கர்த்தரின் நிமித்தமாக மிகச் சிறந்தது எது என்பதற்கு மாறாக உங்களுக்கு மிகச் சிறந்தது எது என்பதில் நீங்கள் அக்கறை கொள்ளும் பொழுது, இரண்டு செயல்கள் விளையும்: உங்கள் விசுவாசத்தில் இருந்து நீங்கள் விழுந்து போவீர்கள், மற்றும் தூர தேசம் அதிக கவர்ச்சியுள்ளதாகி விடும்.

தூர தேசத்திற்குச் செல்லுதல் என்பது எப்போதுமே விசுவாசப் பிரச்சனைகளை உள்ளடக்கியதாக இருக்கின்றது - பெற்றோர் மீதான நம்பிக்கையில் குறைவு, திருமண வாழ்வின் மீதான நம்பிக்கையில் குறைவு, நாம் பழகுகின்ற மனிதர்கள் மீதான நம்பிக்கையில் குறைவு, நம்மீதே நாம் கொண்டுள்ள நம்பிக்கையில் கூட குறைவு - என்ற பிரச்சனைகள் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. இருப்பினும் இவை எல்லாவற்றிற்கும் பின்னால், தேவன் மீதான விசுவாசத்தில் குறைவு - தேவனுடைய வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடியாக அவரது ஏற்பாடுகளின் மீதும், தேவனுடைய அருளிரக்கம் நிறைந்த கவனிப்பின் மீதும் - விசுவாசக் குறைவு ஏற்படுகின்றது.

## மனதிற்கு நிம்மதி
## (1 சாமுவேல் 27:4)

தாவீது பெலிஸ்தரின் நாட்டிற்குச் செல்வதற்கான அடிப்படைக் காரணம், அவர் விசுவாசத்தில் வீழ்ச்சியுற்றிருந்தார் என்பதை வலியுறுத்தியுள்ள நிலையில், எனது அடுத்த கருத்து சிலருக்கு அதிர்ச்சி அளிப்பதாக இருக்கலாம்: *தற்காலிகமாக விடுதலை* தேவை என்று தாவீது மிகவும் விரும்பியதுதான் அவரது உடனடியான விளைவாயிருந்தது. 27:4ல் நாம், "தாவீது காத் பட்டணத்திற்கு ஓடிப்போனான் என்று சவுலுக்கு அறிவிக்கப் பட்டபோது, அவன் அப்புறம் அவனைத் தேடவில்லை" என்று வாசிக்கின்றோம். இனியும் தாவீது தமது தோளுக்கு மேல் விழிப்புணர்வுடன் ஒவ்வொரு கணத்தையும் செலவிடத் தேவையில்லை. அவரும் அவரது குடும்பத்தினரும் நாகரிகமான மனிதர்களைப் போல் ஒரு வீட்டில் வசிக்க முடிந்தது. அவர் இரவு வேளையில் ஒரு கொலைகாரன் வந்து தமது கழுத்தை

அறுத்து விடுவானோ இல்லையோ என்ற அச்சமின்றி உறங்க முடிந்தது.

தொலைதூர தேசத்திற்குச் செல்லுவது பற்றி, பின்வரும் விஷயம் மிகவும் ஈர்க்கத்தக்க வகையில் ஒன்றாக உள்ளது: சகிக்க முடியாத சூழ்நிலை என்று நாம் கருதுபவற்றிலிருந்து நமக்கு உடனடியான விடுதலை கிடைக்கின்றது. ஊதாரி மகன் தொலைதூர தேசத்திற்குச் சென்றபோது, அவன் எவரொருவருக்கும் கணக்கு ஒப்புவிக்கத் தேவையில்லாதவனாயிருந்தான்; அவன் யாரிடத்திலும் பணம் கேட்கத் தேவையில்லாதிருந்தது; அவனுக்குப் பொறுப்புகள் எதுவும் இல்லாதிருந்தது. ஒருவர், தாம் திருமண வாழ்வில் ஒரு வலையில் அகப்பட்டுக் கொண்டதாக உணர்ந்து அதை விட்டு வெளியேறுகின்றபோது, உடனடி விடுதலை என்ற உணர்வு பின்தொடருகின்றது. பெற்றோர்த்துவத்தின் சுமைகள் ஒருவரை அமுக்குவதாகின்றபோது, அவர் அந்தப் பொறுப்புக்களைத் தூக்கியெறிந்தால், அவரது மனதில் விடுதலை (உணர்வு) பாய்ந்தோடி வரக்கூடும். ஒருவர் வாழ்க்கையினால் மூழ்கடிக்கப்பட்டு, போதைப் பொருட்கள் மற்றும் மதுபானம் ஆகியவற்றின் உலகிற்குள் தப்பிச் செல்லுகின்றபோது, அந்தக் கணத்திற்கு வேதனை மறைகின்றது - அது அற்புதமான விஷயமாகக் காணப்படுகின்றது. கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் களைப்பு அடைந்த ஒருவர் "நான் போதிக்க வேண்டிய வகுப்பில் போதிப்பதற்கு அல்லது இந்த வேலையைச் செய்வதற்கு வேறு யாரையாவது நியமியுங்கள்! நான் வெளியேறுகின்றேன்!" என்று அறிவிக்கின்றபோது, விடுதலையின் உணர்வு என்பது சுபிட்சமான மனநிலையாய் இருக்கக் கூடும்.

மக்கள் நிம்மதி பெறுவதற்காக தூரதேசத்திற்குச் செல்லுகின்றார்கள் என்பதை நான் பரிந்துரைக்கின்றேனா? இல்லை, நான் நேர்மையுடன் இருக்க விரும்புகின்றேன். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "பாவ சந்தோஷங்களை" ப் பற்றிப் பேசினார் (11:25), பாவம் கவர்ச்சிகரமானதாக இருக்க முடியும் என்பதை நாம் நன்றாகவே ஒப்புக் கொள்ளலாம். சில வேளைகளில் அந்த ''சந்தோஷங்கள்'' உள்ளானவைகளாக இருக்கும் அளவுக்கு வெளிப்படையானவைகளாக இருப்பதில்லை. சில வேளைகளில் அவைகள் ஆத்துமாவைச் சீராட்டுமளவுக்கு மாம்சத்தைத் திருப்திப் படுத்துவதில்லை.

இந்த வழியில் நிம்மதியை, விடுதலையைப் பெறுவதில் உள்ள பிரச்சனை என்ன? பிரச்சனை இருமடங்கானதாக உள்ளது. முதலாவது, தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதினால் பெறும் நிம்மதி தற்காலிகமானதாக மட்டுமே உள்ளது. "பாவ சந்தோஷங்களை" ப் பற்றிப் பேசியபோது, அவைகள் "அநித்தியமான பாவ சந்தோஷங்கள்'' என்று எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் கூறினார். இவற்றைப் பற்றி KJV யில் "சிறிது காலமே" இருக்கிறவைகள் என்று கூறப்படுகின்றது, அதாவது இவைகள் ''சற்றுக் காலம்'' மாத்திரம் இருக்கின்றவைகளாகும். எனவே தான், "தற்காலிக விடுதலை/நிம்மதி என்பதே தாவீதின் முடிவினுடைய உடனடி விளைவாக இருந்தது" என்று நான் கூறினேன்.

இரண்டாவது, தேவனுக்குக் கீழ்ப்படியாமை என்ற விலையைச் செலுத்தி ஒருவர் நிம்மதியைப் பெறுகின்றபோது, அவர் தமது நிம்மதிக்கு

*மிகவும் உயர்ந்த விலையொன்றைக் கொடுக்கின்றார். ஒருவேளை நீங்கள், ஜெர்ரீ குளோவர் என்ற எழுத்தாளர் கூறிய பின்வரும் நகைச்சுவை கதையொன்றைக் கேட்டிருக்கலாம். மரத்தின் மீது இருக்கும் காட்டுப் பூனை ஒன்றைக் கீழிருந்தவாறே தெளிவாய்ச் சுடுவதற்காக, ஒரு மனிதன் அந்த மரத்தில் ஏறி அதைப் பிடித்துக் கொண்டிருக்க முயற்சி செய்கின்றான். கடைசியில் மரத்தில் ஏறிய அந்த மனிதன், கீழே இருந்த தன் நண்பனை நோக்கி, "எங்களுக்கு நடுவில் சுடு, அப்போது எங்களில் யாராவது ஒருவர் நிம்மதியாயிருக்க முடியும்!" என்று கத்துகின்றான். ஜெர்ரீ இதைக் கூறியபோது, இது பெரும் களிப்புள்ளதாக உள்ளது. நாம், "ஒரு காட்டுப் பூனையின் வாலைப் பிடித்திருந்த" அந்த மனிதன் பற்றிய முன்னுரைத் தலுக்காகப் பரிதாபப்படுகின்றோம். இருப்பினும், அந்த மனிதன் தனது நிம்மதிக்காக மிக உயர்ந்த விலையொன்றைச் செலுத்தியது பற்றி உணர்ந்து அறிகின்றோம்.*

*இப்பொழுதே கூட நீங்கள் தாங்க முடியாதது என்று கருதும் ஒரு சூழ்நிலையில் இருக்கலாம். நீங்கள், "ஏதாவது ஒரு வகையில், எந்த நிம்மதியாவது கிடைத்தால் அதற்காக நான் எதை வேண்டுமானாலும் விலையாகக் கொடுப்பேன்" என்று நினைக்கலாம். ஜாக்கிரதையாயிருங்கள், இல்லையென்றால் அந்த நிம்மதிக்காக நீங்கள் மிக அதிக விலை கொடுத்து விட வேண்டியிருக்கும்!*

## போனதிலிருந்து வந்த கடுமையான விளைவுகள் *(1 சாமுவேல் 27:5-30:6)*

*தற்காலிக நிம்மதி என்பதே தாவீதின் முடிவினால் ஏற்பட்ட உடனடி விளைவாக இருந்தது. இப்போது நாம் இதன் நீண்ட கால விளைவுகளைக் கண்ணோக்குவோம்.*

***அவர் விடுதலையை விலையாகக் கொடுத்து சேவித்தலை வாங்கினார்***

*தாவீது பெலிஸ்தியாவுக்கு வருவதற்கு முன்பு சுதந்திரமானவரா யிருந்தார். அது (மன) அழுத்தங்கள் கொண்ட சுதந்திரமாக இருந்தது, ஆனாலும் அது அப்பொழுதும் சுதந்திரம் என்பதாகவே இருந்தது. இப்பொழுது அவர் புகலிடத்திற்கு மாற்றாக, தமது உபகாரியும், காத் நகரின் அரசனுமான ஆகீசுடன் ஒரு ஒப்பந்தத்தில் உறுதியளித்தார். 27:5ல் தாவீது, தம்மை ஆகீசின் "அடியான்" என்று அழைத்துக் கொண்டார் (1 சாமு. 28:2; 29:8 ஆகிய வசனங்களையும் கவனிக்கவும்). வசனங்கள் 9, 10 ஆகியவற்றில், தாவீது காத் நகரை விட்டுச் சென்றுவிட்ட பிறகும் கூட, தாவீது தமது நடவடிக்கைகள் பற்றி ஆகீசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது.[6] தாவீதினுடையபோல சுதந்திரம் கொண்ட ஒரு மனிதருக்கு, கீழ்ப்படிதல் போன்று அவர் ஆகீசிடம் நடித்திருந்தால் கூட அது கசப்பு மிகுந்ததாகவே இருந்திருக்க வேண்டும்.*

*ஒரு இளம் நபர் உலகத்தார் போல் வாழ்வதற்காக வீட்டை விட்டு வெளியேறுகின்றபோது, அவர் "நான் சுதந்திரமாயிருக்க விரும்புகின்றேன்!"*

என்று உறுதிபடக் கூறுகின்றார். ஒரு நபர், மதுபானம் மற்றும் சட்ட விரோதமான போதைப்பொருட்களைப் பயன்படுத்திப் பரிசோதிக்க விரும்பும்பொழுது, "நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் எனக்கு கூற முடியாது; நான் சுதந்திரமானவனாக இருக்கிறேன்" என்றே பெரும் பாலும் கூறுகின்றார். ஒரு நபர், திருமண உறவைவிட்டு அல்லது பெற்றோர்த்துவத்தின் பொறுப்புக்களை விட்டு வெளியேற விரும்புகின்ற பொழுது, அவர் அல்லது அவள், "என் ஆத்தமா சுதந்திரமாயிருக்க வேண்டும் என்று ஏங்குகின்றது!" என்றே பெரும்பாலும் கூறுகின்றார்(ள்). இவர்கள் பாவத்தின் சர்வாதிகாரமான கட்டுக்களைப் பெற்றுக் கொண்டு அதற்கு மாற்றாக, தங்களின் சுதந்திரமான நிலையில் ஆசீர்வாதமிக்க கட்டுப்பாடு களை விலையாகக் கொடுப்பதை உணர்ந்து அறிவது இல்லை (யோவா. 8:34; ரோமர் 6:16). ஊதாரிமகன் சுதந்திரத்தைக் கண்டறிவதற்காகத் தூர தேசத்திற்குப் போயிருக்கலாம், ஆனால் கடைசியில் அவன் தன்னை, ''அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனுக்குச்'' சேவிப்பவனாகக் கண்டறிந்தான் (லூக். 15:15).

### அவர் தேவனுடன் நெருங்கியிருத்தலை விலையாகக் கொடுத்து சமரசத்தை வாங்கினார்

பெலிஸ்தியாவுக்குள் வந்த உடனேயே, தாவீது கர்த்தருடன் கொண்டிருந்த உறவுமுறையானது பேரழிவுக்கு உட்பட்டது. ஒரு ஆண்டு காலத்திற்கும் அதிகமாக, தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்தார் என்ற குறிப்பிடுதல் காணப்படவில்லை. பெலிஸ்தரின் மத்தியில் தாவீது இருந்த காலத்தில் அவர் சங்கீதங்கள் எதையாவது எழுதியிருந்ததாகவும் குறிப்பிடப் படுவதில்லை. தாவீது பாடுவதை விட்டொழித்து விட்டார். இது ஆச்சரியம் அளிப்பதாயிருக்கவில்லை. தேவனை ஆராதிப்பதை எதிர்ப்பவர்கள் மத்தியில் இருந்து கொண்டு ஒருவர் எப்படி தேவனை வெளிப்படையாக ஆராதிக்க முடியும்? பத்துக் கட்டளைகள் யாவற்றையும் மீறுவதில் மகிழ்ச்சியடைகின்ற மனிதர்கள் மத்தியில் குடியிருக்கும் ஒருவர் எப்படி அந்தப் பத்துக் கட்டளைகளின்படி வாழ முடியும்?

நீங்கள் இந்த உலகத்தார் போல வாழ்வதென்று முடிவெடுத்தால், அது கர்த்தருடனான உங்கள் உறவை அழித்துப்போடும் (1 யோவா. 2:15). பொருளாதார ரீதியாக வெற்றியடைவதே வாழ்வில் மிகவும் இன்றியமை யாத விஷயம் என்று நீங்கள் தீர்மானித்தால், அது கர்த்தருடனான உங்கள் உறவை அழித்துப் போடும் (மத். 6:24). நீங்கள் அவிசுவாசிகளின் தோளோடு தோள் இடித்துக் கொண்டு, அரிதாகவே விசுவாசிகளுடன் இணைவு கொண்டு உங்கள் வாழ்வை நடத்தினால், அது கர்த்தருடனான உங்கள் உறவை அழித்துப் போடும் (1 கொரி. 15:33). இதைக் குறித்து வியப்படை வதற்கு இடமேயில்லை. உலகத்தோடு ஒட்டி வாழ்வதற்கு நீங்கள் உலகத் தாரைப் போலவே பேச வேண்டும், உலகத்தாரைப் போலவே செயல்பட வேண்டும், மற்றும் உலகத்தாரைப் போலவே நீங்களும் செயல் படுகின்றீர்கள் என்று இந்த உலகத்தை நம்ப வைக்க வேண்டும். நீங்கள் அதற்குள் (உலகத்திற்குள்) ஒன்றுகலக்க வேண்டும். இதன் விளைவாக

*நீங்கள் தேவனுடைய பிள்ளையைப் போல் காணப்படுவது சிறிது சிறிதாகக் குறைந்து, அந்த உலகத்தின் பிரஜைகள் போல அதிகம் அதிகமாகக் காணப்படுவீர்கள். இதுவே ஒருவர் தூர தேசத்திற்குச் செல்லுவதற்குச் செலுத்துகின்ற விலையாக உள்ளது.*

*மாயவித்தையை[7] நான் ஒரு பொழுதுபோக்கு என்ற வகையில் நேசிக்கின்றேன். எனது முன்னிளமைப்பருவ வயதுகளில், நான் பெரியவனாகும்போது ஒரு தொழில் முறை மாயவித்தைக்காரராக வேண்டும் என்று முடிவு செய்தேன். இதை நான் என் தாயாரிடம் கூறியபோது, அவர்கள் அதைப் பற்றிச் சற்று நேரம் சிந்தித்து விட்டு, என்னைப் பின்வரும் கேள்வியுடன் நிறுத்தினார்கள்: "நீ எங்கு சென்று மாயவித்தைகளை நடத்திக் காட்டுவாய்?'' அந்த நாட்களில், மாயவித்தை செய்வதில் நிறையப் பொருளீட்ட விரும்பியவர்களில் பெரும்பாலானவர்கள், அதை இரவு விடுதிகளில் செய்ய வேண்டியிருந்தது. எனது தாயார் என்னிடத்தில், "நீ உன் கனவை மெய்ப்படுத்தத் தூர தேசம் போக விருப்பம் கொண்டுள்ளாயா?" என்று கேட்டார்கள், அந்த முடிவை மேற்கொள்வது பற்றி நான் மிகவும் நன்கு போதிக்கப்பட்டிருந்தேன் - பின்பு நான் என் திட்டங்களை மறுதிருத்தம் செய்தேன். தொழில் முறையில் பொழுது போக்காளர்களாகின்றவர்களுக்கு இன்றைய நாட்களில் பல தெரிவுகள் உள்ளன, ஆனால் பொழுதுபோக்குக் களம் என்பது ஒருவர் தமது விசுவாசத்தை இழந்து போகச் சுலபமான தூரதேசமாக உள்ளது என்பது இன்னமும் உண்மையானதாகவே உள்ளது. தொழில்முறைப் பொழுது போக்காளர் என்ற தூரதேசத்திற்குச் சென்று தனது விசுவாசத்தைத் தொடர்ந்து காத்துக் கொண்டுள்ள தேவனுடைய பிள்ளை ஒவ்வொருவருக்கும், (எதிராக) அவ்வாறு சென்று தங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொள்ளாத ஒரு டஜன் பேரை என்னால் குறிப்பிட முடியும்.*

*ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தேர்ந்து கொள்ளுகின்ற தொழில் குறித்து நான் எந்தக் கட்டளையும் விதிப்பதற்கு முயற்சி செய்வதில்லை; ஆனால் தொழில் எதுவாயிருப்பினும், நீங்கள் யாருடன் இணைவு கொண்டிருப்பீர்கள், அவர்கள் பற்றிக் கொண்டுள்ள தராதரங்கள் யாவை, மற்றும் நீங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால் உங்களிடம் எதிர்பார்க்கப்படும் நடத்தை என்ன என்பது பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் நான், நீங்கள் ஒரு தரம் உங்கள் முடிவை மேற்கொண்டவுடன், உங்களையே நீங்கள் குறைவாக ஜெபிப்பதாக மற்றும் குறைவாகப் பாடித் துதிப்பதாகக் கண்டால், நீங்கள் (தேவனுடன் உறவு என்ற கட்டிடத்தின்) வெளிவாயிலுக்கு அருகாக நடந்து அல்ல ஓடிச் செல்ல வேண்டும் என்றே நான் கூறுவேன். தேவனுடனான உங்கள் உறவு முற்றிலுமாக அழிந்துபோகுமுன் அவ்வித சூழ்நிலையை விட்டு வெளியேறிவிடுங்கள்!*

### *அவர் நேர்மையை விலையாகக் கொடுத்து வஞ்சனையான வாழ்வை வாங்கினார்*

*தாவீது சவுலிடமிருந்து தமது ஓட்டத்தைத் தொடங்கிய பொழுது,*

முதலில் அவர் சற்று மதியீனமாக நடந்து கொண்டு ("மோசமான காலங்களில் உயிர் பிழைத்திருப்பது எப்படி?" என்ற பாடத்தில் காணவும்), நம்பிக்கையிழந்த நிலையில் அவர் பொய் கூறி வஞ்சனை உள்ளவரா யிருந்தார். கடைசியில், அதுல்லாம் கெபியில், அவர் தமது நேர்மையை மீளவும் அடைந்தார் - தேடப்பட்டவராக ஓடிக் கொண்டிருந்த எட்டு ஆண்டுகளினூடாகவும் அவர் தமது நேர்மையைக் காத்துக் கொண்டிருந் தார். அவர் தமது மனிதர்களால் மதிக்கப்பட்டும், தம்மை அறிந்தவர்களால் மிகச் சிறந்தவர் என்று எண்ணப்பட்டும் இருந்தார் (24:17). இருப்பினும் இப்பொழுது, தாவீது ஒரு இரட்டை விளையாட்டை விளையாடத் தொடங்கினார்; அவர் வாழ்வு முற்றிலும் ஒரு பொய்யாக ஆனது.

சற்றுக் கழித்து, தாவீது ஆகீசிடம் சென்று, "உம்முடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்குமானால், நான் வாசம் பண்ணும்படி நாட்டிலுள்ள ஊர்களிலே ஒன்றில் எனக்கு இடந்தாரும்; உம்முடைய அடியான் உம்மோடே கூட ராஜதானி பட்டணத்திலே வாசமாயிருப்பானேன்" என்று கூறினார் (27:5). தாவீது, (ஆகீஸ்) ராஜா போல அதே நகரில் வாழத் தாம் தகுதியற்றவர் என்பது போல நடித்தார். உண்மையில், அவர் தமது நடவடிக்கைகளை பிறர் கண்டுபிடிக்காதபடி நடத்த முடியுமாறு, அரசனின் தொடர்ந்து கவனிக்கும் கண்களில் இருந்து புறம்பே இருக்கவே விரும்பினார்.[8] இந்தப் பொய்களும் வஞ்சனைகளும் (மலையாகக்) குவிந்தன.

ஆகீஸ் தாவீதுக்கு, காத் நகரின் தெற்கே இருந்த சிக்லாக்[9] என்ற நாட்டுப்புறச் (சிறு) நகரைக் கொடுத்தான்.[10] தாவீதும், அவரது மனிதர்களும், அவர்களின் குடும்பங்களும் அங்கு (வசிக்கச்) சென்றார்கள். தாவீதும் அவரது மனிதர்களும் இதற்குமுன் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு தங்களுக்குப் பொருளீட்டிக் கொண்டிருந்தார்கள்; இப்பொழுது அவர்கள் அழிக்கும் வேலையில் ஈடுபட்டுப் பொருள் சம்பாதிக்கத் தொடங்கினார் கள். அவர்கள் மூட்டைப் பூச்சியையும் சுண்டெலிகளையும் அல்ல, ஆனால் மனிதர்களை அழித்தார்கள்.

> அங்கேயிருந்து தாவீதும் அவன் மனுஷரும் கெசூரியர்மேலும் கெஸ்ரியர்மேலும் அமலேக்கியர்மேலும் படையெடுத்துப் போனார் கள்; ... தாவீது அந்த நாட்டைக் கொள்ளையடிக்கிறபோது, புருஷர் களையும் ஸ்திரீகளையும் உயிரோடே வைக்காமல், ஆடுமாடுகளையும் கழுதைகளையும் ஒட்டகங்களையும் வஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டு ஆகீசிடத்துக்குத் திரும்பிவருவான் (27:8, 9).

கெசூரியர், கெஸ்ரியர் மற்றும் அமலேக்கியர் ஆகியோர் சிக்லாகின் தென்பகுதியில் வாழ்ந்தார்கள். கெசூரியர் என்பவர்கள் பெலிஸ்தியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கிடையில் இருந்த பாலைவனப் பகுதியில் வாழ்ந்து வந்த நாடோடி மக்கள் ஆவார்கள்.[11] கெஸ்ரியர் பற்றி நாம் ஒன்றும் அறிவதில்லை; இவ்விடத்தில் மட்டுமே அவர்களைப் பற்றிக் குறிப்பிடப் படுகின்றது. அமலேக்கியர் என்பவர்கள் மிக முக்கியமான குழுவினராய் இருந்தார்கள். அவர்கள் ஏசாவின் சந்ததியில் வந்த நாடோடி மக்களாய்

இருந்தார்கள் (ஆதி. 36:12, 16). அவர்கள் ஒரு பெரிய இனத்தவராகி, வலிமை நிறைந்த மக்களாயிருந்தார்கள்.[12] இந்த மூன்று இனத்தவர்களும் பெலிஸ்தியாவுக்கும் இஸ்ரவேலுக்கும் விரோதிகளாய் இருந்தனர்.[13]

நாட்டில் இருந்த புறதெய்வ வணக்கக் கூட்டத்தாரை வெளியேற்றும் படி யோசுவா இஸ்ரவேலர்களுக்குக் கட்டளையிட்டிருந்ததையே அல்லது அமலேக்கியர்களை "முற்றிலும் சங்கரிக்க வேண்டும்" (1 சாமு. 15:3, 8, 9) என்று சவுலுக்கு கூறப்பட்டிருந்ததையே - தாவீது செய்தார் என்று ஒருவர் வாதிடக்கூடும். ஆயினும் நமது வேதப் பாடப்பகுதி, ஒவ்வொரு ஆணை யும், ஒவ்வொரு பெண்ணையும் (மற்றும் அநேகமாக ஒவ்வொரு குழந்தை யையும்) தாவீது கொன்றதற்குக் காரணம், அவர் தேவனுக்குக் கீழ்ப்படிவதற் காக அல்ல, ஆனால் அவர்களின் பொருள்களைக் கொள்ளையிடுவதற் காகவே என்று கூறுகின்றது. 27:11ஐக் கவனியுங்கள்: " 'இன்ன இன்னபடி தாவீது செய்தான்' என்று தங்களுக்கு விரோதமான செய்தியை அறிவிக்கத் தக்க ஒருவரையும் தாவீது காத் பட்டணத்திற்குக் கொண்டு வராதபடிக்கு, ஒரு புருஷனையாகிலும் ஸ்திரீயையாகிலும் உயிரோடே வைக்காதிருப் பான்; அவன் பெலிஸ்தரின் நாட்டுப் புறங்களில் குடியிருக்கிற நாளெல்லாம் இவ்வண்ணமே செய்துகொண்டுவந்தான்." இது இரத்த வெறிகொண்ட, திட்டமிட்ட கொலையாக இருந்தது.

நீங்கள் ஒரு பாலைவனத்தின் வழியே பயணம் செய்து கொண்டிருப்ப தாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் சூடாக, களைப்பாக மற்றும் தாகமாக இருக்கின்றீர்கள். தொலைவில் நீங்கள் ஒரு நகரத்தைக் காண்கின்றீர்கள். நீங்கள் சோர்வு நீக்கப்படுதலை எதிர்பார்த்து உங்கள் நடையை விரைவு படுத்துகின்றீர்கள்; ஆனால் நீங்கள் (அந்த நகரின்) அருகாமையில் செல்லுகின்ற பொழுது, அங்கு ஏதோ தவறு இருப்பதாக உணருகின்றீர்கள். அங்கு நாய்கள் உறுமும் சத்தம் மட்டும் கேட்கின்றது, கழுகுகள் தலைக்குமேல் வட்டமிட்டுக் கொண்டுள்ளன. நீங்கள் அந்த நகரின் வெளிப்பகுதியை அடைகின்ற பொழுது, காற்றுக் கொண்டு வரும் மரண நெடி உங்களை மூடுகின்றது. வாயைத்திறக்காமலேயே இருக்க முயற்சி செய்தவாறே நீங்கள் பிரதான வீதியைக் காணும் வரை ஒரு சில அடிகள் தூரம் நடக்கின்றீர்கள். அது உங்கள் மனத்துயரத்திற்குரிய காட்சி யாக உள்ளது. எங்கு நோக்கினும் இறந்த சடலங்கள் புழுதியில் புரண்டு கிடக்கின்றன. வீதியின் ஓரத்தில் இரத்தம் ஒரு சிற்றாறுபோல் ஓடிக் கொண்டுள்ளது. காட்டு நாய்களும் பிணந்தின்னிக் கழுகுகளும் தங்களின் அருவருப்பான விருந்து குறித்துச் சண்டையிட்டுக் கொண்டுள்ளன. நீங்கள் அந்த நகரை விட்டு வெளியே வருமுன்பாகவே உங்கள் வயிறு கலங்கி விடாதிருக்க நீங்கள் கடின முயற்சி செய்ய வேண்டியதாக உள்ளது. நீங்கள் உங்கள் பயணத்தை மீண்டும் தொடரும்பொழுது, உங்கள் சிந்தையில் ஒரு கேள்வி ஓடுகின்றது: "இதை யார் செய்திருக்க முடியும்? யார்?"

தாவீது இதைச் செய்தார்; "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதராயிருந்த" அவரே தூரதேசத்திற்குச் செல்லுதல் என்ற தவறைச் செய்திருந்தார்.

அது இந்தக் கவலைமிக்க வரலாற்றின் முடிவாக இருப்பதில்லை. தாவீது

*இந்த மகாபயங்கரமான வேலையில் இருந்து, யுத்தத்தில் கொள்ளையிட்ட பொருட்களுடன் திரும்புகையில், அவர் முதலில் காத் நகருக்குச் சென்று ஆகீஸ் அரசனிடத்தில் அறிக்கை சமர்ப்பித்து (மற்றும் அநேகமாக அவனுக்குச் சேர வேண்டிய பங்கை அவனிடத்தில் கொடுத்து) வந்தார். தாவீது அவ்வாறு வருகையில், '' 'இன்று எத்திசையில் போய்க் கொள்ளையடித்தீர்கள்' என்று ஆகீஸ் கேட்கும்போது, தாவீது: 'யூதாவுடைய தென் திசையிலும், யெராமியேலருடைய தென்திசையிலும், கேனியருடைய தென் திசையிலும்' என்பான்'' (27:10).*

*(இவ்வசனத்தில், தென்திசை என்பதற்கு ஆங்கிலத்தில்* Negev *என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.*

"Negev" *(இது* "Negeb" *என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும்) என்றால், ''வறண்ட நாடு'' அல்லது ''பாலைவனம்''[14] என்று அர்த்தப் படுகின்றது. இது பெயர்செபாவில் இருந்து சீனாய் தீபகற்பத்தின் மேடான நிலங்கள் வரையிலும் விரவிக் கிடந்த பாலை நில வனப்பகுதியாக இருந்தது (இருக்கிறது). ''யூதேயாவின் தென்பகுதி'' என்பது ஒரு பொதுவான சொற்றொடராக இருந்தது. இது யூதேயாவின் தென்கோடியில் இருந்த யூதர்களின் குடியிருப்புக்களைக் குறித்தது. "யெராமியேலருடைய தென் திசை'' என்பது எபிரோனுக்கு அருகாமையில் இருந்த வனப்பகுதியாய் இருந்திருக்க வேண்டும். யேராமியேலர் என்பவர்கள், காலேபியர்களின் உறவினர்களாக, அவர்களுடன் நெருங்கிய உடன்பாடு கொண்டிருந்தவர் களாக இருந்தார்கள் (1 நாளா. 2; எண். 13; யோசு. 14; 15). "கேனியருடைய தென்பகுதி" என்பது பெயர்செபாவின் கிழக்கில் இருந்த வறுமைப்பட்ட நாடாகும், மோசேயின் காலத்திலிருந்தே கேனியர்கள் இஸ்ரவேலர்களுடன் இணைவு கொண்டிருந்தார்கள்; மோசேயின் மாமனாரான எத்திரோ ஒரு கேனியராயிருந்தார் (நியா. 1:16).*

*வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், ஆகீசிடத்தில் தாவீது, தாம் இஸ்ரவேல்களையும் அவர்களுடன் உடன்பாடு கொண்டிருந்தவர்களையும் கொள்ளையிட்டதாகக் கூறினார் - ஆகீசும் அதை நம்பினான். ஆகீஸ், தனது நாட்டின் தென்பகுதியைத் தாவீது பாதுகாத்துக் கொண்டிருந்ததாக, தனக்கு வெகுமதிகள் கொண்டுவந்து தந்ததாக, அவர் (தாவீது) யூதேயாவுக்குத் திரும்பிச் செல்லுதல் என்பது ஒருக்காலும் சாத்தியப்படாத வகையில் அவர் நடந்து கொண்டிருந்ததாக நினைத்தான். ஆகீஸ், "அவன் இஸ்ரவேலராகிய தன்னுடைய ஜனங்கள் தன்னை வெறுக்கும்படி செய்கிறான்; என்றைக்கும் அவன் என் ஊழியக்காரனாயிருப்பான்'' (27:12) என்று மகிழ்வுடன் கூறுவதை நான் (மனக் கண்களில்) காண முடிகிறது. தாவீது எவ்வளவு வலிவான பொய்யரானார் - அவர் எவ்வளவு திறமையாக அரசனை ஏமாற்றினார் - என்பதைக் காண்கையில் இருதயம் துக்கப்படுகின்றது. சவுலும் நாபாலும் தாவீதுக்கு, நன்மைக்குப் பதில் தீமை செய்தபடியால் தாவீது கோபம் கொண்டார். இப்பொழுதோ அவர் அதே விதமாகவே ஆகீசை நடத்தினார். தாவீது, ஆகீசின் உபசரிப்பிற்கு, பொய்கள் மற்றும் வஞ்சனை என்ற நாணயங்களை திருப்பிச் செலுத்தினார்!*

*உங்கள் நேர்மைக்குச் சேதாரம் விளைவிக்காமல் நீங்கள் தூர*

தேசத்திற்குள் செல்ல முடியாது. நீங்கள் அங்கு சென்றும் கூட, உங்கள் கிறிஸ்தவத் தர அளவையைப் பராமரிப்பதாக வலியுறுத்தலாம். நீங்கள், "இப்பொழுது அங்கு செல்வது என்பது எனக்கு அனுகூலமாக உள்ளது, ஆனால் இது சற்றுக் காலத்திற்கு மாத்திரமே. அது என்னைத் துன்புறுத்து வதற்கு முன்பு, நான் வெளியேறி விடுவேன்" என்று கூறலாம். இதைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்: நீங்கள் பாதிக்கப்படுவீர்கள்.

### அவர் தெளிவான நிலையை விலையாகக் கொடுத்து குழப்பமான நிலையை வாங்கினார்

அத்தியாயம் 28 தொடங்குகையில், பெலிஸ்தர்கள் சவுலுக்கும் இஸ்ரவேலின் படைக்கும் எதிராக ஒரு தீர்மானமான யுத்தத்திற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். ஆகீஸ் தாவீதைத் தன்னிடத்தில் அழைத்து, "நீயும் உன் மனுஷரும் எவ்விதத்திலும் என்னோடேகூட யுத்தத்திற்கு வர வேண்டும் என்று அறியக் கடவாய்" (28:1) என்றான். பழங்கால அண்மைக் கிழக்கு நாடுகளில், ஒரு நாட்டில் புகலிடத்தை ஏற்றுக் கொள்வது என்பது அந்நாட்டின் இராணுவ சேவையில் பணியாற்றும் கடமையை உள்ளடக்கி இருந்தது.

இது தாவீதுக்கு ஏற்படுத்திய இக்கட்டான நிலையைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். ஆகீசுடன் செல்ல மறுத்தல் என்பது தாவீதின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தி விடும். இருப்பினும், அவ்வாறு செல்லுதல் என்பது, ஆண்டுகள் பலவாகத் தாவீது தவிர்த்திருந்ததில் அவர் ஈடுபடுவதாக அர்த்தப்படுத்தும்; அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப் பட்டவருக்கு விரோதமாக யுத்தம் செய்ய வேண்டியிருக்கும், அவர் தமது நண்பர் யோனத்தானுக்கு எதிராக யுத்தம் செய்ய வேண்டியிருக்கும் என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை. இது, தேவனுடைய பிள்ளை தூர தேசத்திற்குச் செல்லும்போது தன்னைத்தானே இருக்கக் காண்கின்ற இக்கட்டான சூழ்நிலையின் வகையாக உள்ளது.

தாவீதின் பதில் குழப்பமானதாக இருந்தது: "உம்முடைய அடியான் செய்யப்போகிறதை நீர் நிச்சயமாய் அறிந்து கொள்வீர்" (28:2அ) என்று கூறினார். ஆகீஸ் தாவீதின் வார்த்தைகளை, ஆதரவுக்கான உறுதிமொழியாக எடுத்துக் கொண்டு, "இதற்காக உன்னை எந்நாளும் எனக்கு மெய்க் காவலனாக வைப்பேன்" (28:2ஆ) என்று பதில் அளித்தான். வேறு வார்த்தை களில் சொல்வதென்றால், ஆகீஸ் தாவீதிடம், "நான் உன்னை நம்புகின்றேன், இவ்விதமாக நான் என் உயிரையே உன் கையில் ஒப்படைக்கின்றேன்!" எனக் கூறினான். ஆயினும் தாவீது, தாம் என்ன செய்யக்கூடும் என்பதை ஆகீஸ் விரைவில் "காண்பான்" என்பதாகவே அர்த்தப்படுத்தியிருக்கலாம். தாவீது எதை அர்த்தப்படுத்தினார் என்பதை யார் அறிவார்? தூர தேசத்தில் எல்லாமே கவனம் செலுத்துதலுக்கு வெளியே இருப்பதாகின்றன.

தூர வடக்குப் பகுதியில் பெலிஸ்தர் தங்கள் படைகளை ஒன்று திரட்டினார்கள் (28:4).[15] அவ்வேளையில் இஸ்ரவேலர்கள், கில்போவா மலையின் கீழ்ச் சரிவுகளில், யெஸ்ரயேல் என்ற நகரின் அருகில் பள்ளத் தாக்கினூடே முகாமிட்டிருந்தார்கள் (28:4; 29:1ஐயும் காணவும்).

அத்தியாயம் 29 தொடங்குகையில், பெலிஸ்த இராணுவத்தின் முக்கிய பகுதியானது வடக்கு நோக்கி அணி வகுத்துச் சென்றது. வசனம் 2, தாவீதும் அவர் மனிதர்களும் ஆகீசோடே பின்தண்டில் போனார்கள் என்று குறிப்பிடுகின்றது. அந்த படையானது தங்கள் அடைவிடமான சூநேமிலிருந்து சுமார் நாற்பது மைல் தொலைவில் இருந்த ஆப்பெக் என்ற இடத்திற்கு வந்து சேரும்வரை அணிவகுத்துச் சென்றது. அவர்கள் தங்கள் துருப்புகளை ஒழுங்குபடுத்துவதற்காக அங்கே நின்றார்கள் (29:1).

(சிக்லாகில் இருந்து) ஆப்பெக் என்ற இடத்திற்குப் பயணம் செய்யக் குறைந்தது மூன்று நாட்கள் ஆனது (1 சாமு. 30:1ஐக் காணவும்). தாவீது தாம் இரட்டை வாழ்வை வாழ முடிவு செய்ததால் ஏற்பட்டிருந்த இக்கட்டான நிலையைக் குறித்து நினைத்துப் பார்க்க மூன்று நீண்ட நாட்களைக் கொண்டிருந்தார். அவரது சிந்தனைகளைக் கற்பனை செய்து பாருங்கள்: "நான் என்ன செய்யப் போகிறேன்? நானும் என் மனிதர்களும் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவருக்கு விரோதமாக யுத்தம் செய்ய இயலாது ... நாம் சண்டையிடக் கூடும், ஆனால் சவுலையோ அல்லது யோனத்தானையோ தொடவும் கூடாது. இல்லை, அது நாம் நமது சொந்த மக்களுடன் யுத்தம் செய்தலாயிருக்குமே. தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரை நான் புண்படுத்தாமல் இருப்பது மட்டும் எனக்குப் போதுமானதல்ல என்று தேவன் எனக்குக் காண்பித்துள்ளாரே; பிற மக்கள் அவரைத் துன்புறுத்துவதில் இருந்தும் நான் அவர்களைத் தடுக்க வேண்டும் ... ஒருவேளை நாம் யுத்தத்திற்குச் செல்லும்போது, நானும் எனது மனிதர்களும் பின்தண்டில் இருந்துகொண்டு, யுத்தம் தொடங்குகையில் சவுல் அவர்களை முன்பகுதியில் தாக்க, நாங்கள் அவர்களைப் பின்பகுதியில் தாக்கலாமே. இல்லை. அது வேலைக்கு உதவாது, ஏனென்றால் நாங்கள் சவுலின் படையினரை அடையும்பொழுது, அவர் என்னைக் கொல்லும்படி கட்டளை பிறப்பித்து விடுவார். பின்பு நாங்கள் ஒரு படையுடன் என்பதற்குப் பதிலாக இரு படையுடன் யுத்தம் செய்ய வேண்டியிருக்கும். ... ஒருவேளை இதை நான் செய்ய முடியாதென்று ஆகீஸ் அரசனிடம் கூறிவிடலாமா? ஆனால் நான் அவ்வாறு செய்தால், பெலிஸ்தரின் சேனை முழுவதும் எங்கள் மேல் திரும்பி எங்களை முற்றிலுமாகத் துடைத்து ஒழித்து விடுமே ... ஒருவேளை, நாங்கள் யுத்தம் செய்வதாக நடித்துக் கொண்டு, உண்மையில் யுத்தம் செய்யாதிருக்க முடியுமா? இதற்கு மாறாக, நாங்கள் எங்களையே தற்காத்துக் கொள்ளாதிருந்தால், அது தற்கொலை செய்து கொள்வது போலிருக்கும் ... நான் செய்ய வேண்டியது என்ன? என்ன? என்ன?"

ஆப்பெக்கில் கடைசித் துருப்புகள் முகாமிற்குள் வந்து சேருகையில், பெலிஸ்தியரின் தளபதிகள், ஆகீசின் போர் வீரர்கள் மத்தியில் தாவீதும் அவரது மனிதர்களும் இருந்ததைக் கண்டார்கள். உடனே அவர்கள் ஆகீசை எதிர்த்து நின்றார்கள்:

> அப்பொழுது பெலிஸ்தரின் பிரபுக்கள்: "இந்த எபிரெயர்[16] என்னத்திற்கு" என்றார்கள்; ஆகீஸ் அவர்களைப் பார்த்து: "இஸ்ரவேலின்

*ராஜாவாகிய சவுலின் ஊழியக்காரனாயிருந்த இந்தத் தாவீது இத்தனை நாட்களும் இத்தனை வருஷங்களும்[17] என்னோடு இருக்க வில்லையா? இவன் என்னிடத்தில் வந்து சேர்ந்த நாள்முதல் இந்நாள்வரைக்கும் ஒரு குற்றமும் நான் இவனில் கண்டுபிடிக்க வில்லை" என்றான் (29:3).*

*தாவீதின் நடவடிக்கைகள் பற்றி ஆகீசின் விவரிப்பைக் கவனியுங்கள்: "ஒரு குற்றமும் நான் இவனில் கண்டுபிடிக்கவில்லை." தாவீது தாம் ஒருவேளை பெலிஸ்தியாவில் "தந்திரமான இராணுவ நடவடிக்கை" என்ற வகையில் அல்லது "நடைமுறைக்கு ஏற்ற செயல்பாடு" என்ற வகையில் பெலிஸ் தியாவில் ஓய்ந்திருக்கலாம்; அதை ஆகீஸ், "குற்றமற்ற தன்மை" என்று அழைத்தான். நாம் தூர தேசம் ஒன்றிற்குச் சென்றிருக்கின்ற பொழுது, நமது நோக்கங்கள் குறித்து நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கலாம், ஆனால் அங்குள்ள குடிகள், நம்மை நாமே காண முடிவதைக் காட்டிலும் அதிகம் தெளிவாக நம்மைக் காணக் கூடியவர்களாய் இருப்பார்கள்.*

*இந்த இடத்தில், தேவன் அடியெடுத்து வைத்து, தாவீதினால் "சாத்தியமாகாத ஊழியத்தை" மிகவும் பொருத்தமற்ற ஆதாரமூலத்தினால் தீர்த்து வைத்தார்: அந்த ஆதாரமூலம் பெலிஸ்தியப் படைத் தளபதிகள். ஆகீசு தாவீதைத் தற்காத்த முறைமை அந்தத் தளபதிகளுக்குத் திருப்திகரமாய் அமையவில்லை.[18] அவர்கள் ஆகீசிடம், "இந்த மனிதனைத் திரும்பிப் போகச் செய்யும்" என்று ஆணையிட்டார்கள் (29:4).*

*ஆகீஸ் தாவீதை எந்தக் கேள்விக்கும் இடமின்றி நம்பினாலும், படையின் தளபதிகளினிமித்தம் தாவீதை அழைப்பித்து,[19] அவர் சிக்கலாகிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று கூறினார். தாவீது தம் நற்பெயரைக் காத்துக் கொள்வதற்காக அதை மறுக்க வேண்டியிருந்தது. இருப்பினும், அவரது மறுப்புரையும் கூட குழப்பத்தின் தொனி கொண்டதாகவே இருந்தது: " ... ஏன்? நான் செய்தது என்ன? நான் வந்து, ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களோடே யுத்தம் பண்ணாதபடிக்கு, நான் உம்மிடத்தில் வந்த நாள் முதற்கொண்டு இன்றைய வரைக்கும் உமது அடியேனிடத்தில் கண்டுபிடித்தது என்ன?" (29:8). "ராஜாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களோடே" என்பது ஆகீசின் விரோதிகளைக் குறிப்பிடக் கூடும் - அல்லது சவுலின் விரோதிகளைக் குறிப்பிடக் கூடும்.[20]*

*தாவீதின் வார்த்தைகள் எதை அர்த்தப்படுத்தியிருப்பினும், அவர் தமக்குத் தரப்பட்ட வாய்ப்பை அனுகூலமாக்கிக் கொள்வதில் காலம் தாழ்த்தாமல் செயல்பட்டார். அடுத்த நாள் காலை வேளையில் சூரிய உதயத்தின்போது, பெலிஸ்தர்கள் சவுலுடன் தங்கள் வாழ்வை நிர்ணயிக்கும் போர் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில்,[21] தாவீது அவரது மனிதர்களும் சிக்லாகை நோக்கித் திரும்பிக் கொண்டு இருந்தார்கள்.*

*தாவீது வீட்டிற்கு விரைவாகத் திரும்பிக் கொண்டிருக்கையில், அது நிம்மதியின் மிக ஆழமான உணர்வாக இருந்திருக்க வேண்டும். இருந்த போதிலும், அவர் தாம் ஆகீசை வஞ்சித்ததையும், அந்த அரசன் இவரை தாராளமாகப் புகழ்ந்தது மற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்தியதையும்*

*நினைக்கையில் அவரது மனச்சாட்சியில் வேதனை ஏற்பட்டிருக்க வேண்டும்.[22]*

*வாழ்வில் நீங்கள் உங்கள் நேர்மைத் தன்மையைத் தக்க வைத்துக் கொண்டிருந்தால், நீங்கள் வேறு எதையாவது சாதித்து இருக்கின்றீர்களா இல்லையா என்பது எவ்வித மாறுபாட்டையும் ஏற்படுத்துவது இல்லை; நீங்கள் ஒரு வெற்றியாளராகவே இருப்பீர்கள். இதற்கு மாறாக, நீங்கள் உங்கள் நேர்மைத் தன்மையை இழந்து போயிருந்தால், நீங்கள் வேறு எதனைச் சாதித்து இருந்தாலும், நீங்கள் ஒரு தோல்வியாளராகவே இருப்பீர்கள். உங்கள் வாழ்வின் முடிவில், "நான் என் உத்தமத்திலே நடக்கிறேன்" (சங். 26:1-4) என்று கூறக்கூடும்படி வாழ்வதற்கு முடிவு செய்யுங்கள்.*

### *அவர் மோசமான சூழ்நிலையை விலையாக கொடுத்து மிக மோசமான சூழ்நிலையை வாங்கினார்*

*தூர தேசத்திற்குத் தாவீது சென்ற பயணமானது, அவரும் அவர் மனிதர்களும் சிக்லாகிற்குத் திரும்பி வந்தபோது மிகவும் மோசமான சூழ்நிலையை அடைந்தது.*

> *தாவீதும் அவன் மனுஷரும் மூன்றாம் நாளிலே, சிக்லாகுக்கு வந்து சேருகிறதற்குள்ளே, அமலேக்கியர் தென்புறத்துச் சீமையின்மேலும் சிக்லாகின்மேலும் விழுந்து, சிக்லாகைக் கொள்ளையடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்து ... தாவீதும் அவன் மனுஷரும் அந்தப் பட்டணத்திற்கு வந்தபோது, இதோ, அது அக்கினியினால் சுட்டெரிக் கப்பட்டது என்றும், தங்கள் மனைவிகளும் தங்கள் குமாரரும் தங்கள் குமாரத்திகளும் சிறைபிடித்துக் கொண்டுபோகப்பட்டார்கள் என்றும் கண்டார்கள் ... தாவீதின் இரண்டு மனைவி(களும்) ... சிறை பிடித்துக் கொண்டுபோகப்பட்டார்கள் (30:1-3, 5).*

*தாவீது சிக்கலாகில் இருந்து தெற்கு நோக்கிச் சென்ற நாட்கள் ஒவ்வொன்றிலும் அமலேக்கியரின் நகரங்களைக் கொள்ளையிட்டிருந்தார். அந்த நகர் ஒன்றின் குடிகள் யாவரும் கொல்லப்பட்டுக் கிடந்த காட்சி நினைவில் இருக்கிறதா? எனது பாட்டி "சுவற்றில் எறிந்த பந்து திரும்பி வரத்தானே செய்யும்?" என்று கூறுவார்கள். (யூதேயாவின் தெற்குப் பகுதியிலும் பெலிஸ்தியாவிலும்[23]) அமலேக்கியர் கொள்ளையிடுதல் என்பது வழக்கமற்றதாய் இருந்ததில்லை, ஆனால் சிக்லாகை எரித்துச் சாம்பலாக்கிய தென்பது வழக்கமற்றதாய் இருந்தது. தாவீதின் முன்னெச்சரிக்கைகள் எவ்வளவுதான் இருந்தாலும், தாவீதும் அவரது மனிதர்களும்தான் அமலேக்கியர்களின் கொலைக்குப் பொறுப்பாளிகள் என்ற வார்த்தை அவர்களை (உயிருடன் இருந்த அமலேக்கியர்களை) எட்டிற்று.*

*உங்கள் கற்பனையை மீண்டும் இயக்குங்கள். ஆப்பெக்கில் இருந்து சிக்லாகிற்கு சுமார் எழுபது அல்லது எண்பது மைல்கள் தொலைவு இருந்தது. அது ஒரு கடினமான மூன்றுநாள் பயணமாயிருந்தது. தாவீதும் அவரது மனிதர்களும் களைப்பும் இளைப்பும் அடைந்தவர்களாய், தங்கள்*

*குடும்பங்களுடன் மீண்டும் ஒன்றிணைவதை எதிர்நோக்கி இல்லத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இருப்பினும் அவர்கள் கடைசி எழுச்சியின் உச்சத்திற்கு வந்தடைந்தபோது அங்கு அவிசுவாசத்தின் கதறல் ஒன்றிருந்தது. நகர் இருந்த இடத்தில், புதைந்தகொண்டிருந்த சிதிலங்களே எஞ்சியிருந்தன. அம்மனிதர்கள் தங்கள் மனைவியர்கள் மற்றும் பிள்ளைகளின் பெயர்களைச் சத்தமிட்டுக் கூவி அழைத்துக் கொண்டே சரிவுகளில் அவசரமாய்க் கீழிறங்கி, புகை மற்றும் சேதமான பொருட்களினூடே ஓடினார்கள். அவர்களுக்குப் பதில் எதுவும் கிடைக்கவில்லை, புலம்பிய காற்று நீருபூத்த நெருப்பைக் கிளறி விடமட்டும் வீசிற்று.*

*மிகவும் மோசமாகப் பயந்த அம்மனிதர்கள், தங்கள் வெறுங்கைகளால் இன்னும் சூடாயிருந்த குப்பைகளைக் கிளறினார்கள், தங்கள் கைகளில் கொப்புளங்கள் கிளம்பும் வரையிலும் மற்றும் சக்தி இருந்த கரி மற்றும் சாம்பலின் மீது வழிந்தோடிய கொதிக்கும் கண்ணீர், தடயங்களை ஏற்படுத்திற்று. "அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள்" (30:4).*

*இதை நான் 1993ன் பனிக்காலத்தில் எழுதுகையில், லாஸ் ஏஞ்சலஸின் பகுதிகளில் காட்டுத் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. தங்கள் வீடுகளுக்குத் திரும்பிய மக்கள் (தங்கள் வீடுகளின்) அஸ்திபாரத்திற்கும் சற்றே அதிகமானவை மட்டும் எஞ்சியிருக்கக் கண்டதை நாங்கள் பார்த்தோம். அந்தக் காட்சியைக் கண்ட முகங்கள், தலையை அசைத்து, "போயிற்று, எல்லாம் போயிற்று" என்று கூறியதைக் கண்டோம். மற்றவர் கள் ஏறக்குறைய தடுமாறி வீழ்ந்து போயிருந்ததை நாங்கள் கண்டோம். அந்தத் தீ விபத்திலிருந்து ஏதேனும் தப்பிற்றா என்று தேட, சாம்பலைச் சலித்துக் கொண்டிருந்தவர்களை நாங்கள் கண்டோம். இவர்கள், தாவீதும் அவரது மனிதர்களும் அந்தக் கணத்தில் கொண்டிருந்த உணர்வுகளைப் பற்றிச் சற்று அறிவார்கள்.*

*ஆயினும், சிக்லாகில் துன்பம் அத்துடன் ஓயவில்லை. அம்மனிதர்கள் தங்களுக்குள் கிசுகிசுக்கத் தொடங்கி, தாவீது இருந்த திசையை நோக்கி இருண்ட பார்வையை வீசினார்கள். உரையாடலின் சிறு துணுக்குகள் தாவீதின் செவியை வந்தடைந்தன: "நாம் யூதேயாவிலேயே தங்கியிருந்திருந் தால், இது ஒருக்காலும் நடந்தேயிராது!"; "அவன் (தாவீது) நம்மில் சிலரை, நமது குடும்பங்களைக் காவல் செய்வதற்கு விட்டுச் சென்றிருக்க வேண்டும்!"; "இது எல்லாம் தாவீதின் தவறாகவே உள்ளது!" வசனம் 6, "தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறிய வேண்டும் என்று சொல்லிக் கொண்டார்கள்" என்று குறிப்பிடுகின்றது. "தாவீது மனக்கவலையாய் இருந்தான்" என்று இது மொழிபெயர்க்கப்படக் கூடும். அதுல்லாம் குகையை அடைந்த வேளையில் தாவீது இருந்ததை விட இப்போது மிகவும் தனிமையாய் இருந்தார் (சங். 142:4). அப்பொழுது அவர் ஊர்ந்து மற்றும் தவழ்ந்து செல்லும் உயிரினங்கள் மட்டும் தம்மைச் சுற்றியிருக்கக் கண்டார்; இப்பொழுதோ அவர், தம்மைச் சுற்றிலும்*

கோபங்கொண்ட அறுநூறு மனிதர்கள் தங்கள் கைகளில் கற்களுடன் நிற்கக் கண்டார். சவுல் அவரைக் கொல்லாமல் இருப்பதற்காக அவர் பெலிஸ்தியாவிற்கு ஓடியிருந்தார்; இப்பொழுது அவர் தமது சொந்தப் படையினராலேயே கொலை செய்யப்படவிருந்தார்.

ஊதாரி மகன் தன் வீட்டைவிட்டு வெறியேறி, வெளிச்சமிக்க விளக்குகள் மற்றும் துரிதமான கும்பல் ஆகியவற்றினால் சூழப்பட்டிருந்த போது, அவன் சரியான முடிவை எடுத்திருந்ததாகவே நினைத்தான் என்பதில் ஐயம் இல்லை. இருப்பினும் மிக விரைவிலேயே அவன் ஒரு பன்றிக் கொட்டகையில், அற்பமான, வெறிபிடித்த பன்றிகளுடன்[24] இருந்தான், அவைகளின் வாய்களில் இருந்து அவன் பறித்துக் கொண்ட ஒவ்வொரு கவளம் உணவிற்காகவும் (நெற்று அல்லது தவிடு) அவன் மீது அவைகள் ஆத்திரம் கொண்டிருந்தன. அதுவே தூர தேசத்தின் வழிமுறை யாக உள்ளது. அது உங்களுக்கு முன்பாக அற்பமான விளையாட்டுப் பொருட்களை ஊசலாடச் செய்கின்றது, பின்பு அவற்றை உங்களிடமிருந்து பறித்துக் கொள்ளுகின்றது. போதைப் பொருட்கள் மிக மேன்மையான சந்தோஷத்தை வாக்களிக்கின்றன, பின்பு அவைகள் ஒருவரின் வாழ்வையே நரகமாக்குகின்றன. வீட்டை விட்டு ஓடுதல் என்பது சுதந்திரத்தை வாக்களிக்கின்றது, பின்பு அது தனிமையையும் பெரும் வருத்தத்தையும் அளிக்கின்றது. திருமண முறிவு என்பது நிம்மதியை வாக்களிக்கின்றது, பின்பு அது "ஆனால் எல்லாம் உண்மையில் முடிந்து போகவில்லையே!" என்று இகழ்ச்சியாகச் சிரிக்கின்றது. தூர தேசத்தின் வாக்குறுதிகளினால் வஞ்சிக்கப்பட்டு விடாதீர்கள், இல்லையென்றால் நீங்களும்கூட, மகிழ்வற்ற சூழ்நிலையை விலையாகக் கொடுத்து, பெருந்துன்பத்தை வாங்குகிறவர் களாயிருக்கக் காண்பீர்கள்!

### அவர் நேர்மறையான செல்வாக்கை விலையாகக்கொடுத்து எதிர்மறையான செல்வாக்கை வாங்கினார்

அந்தத் தூர தேசத்திற்குத் தாவீது தாம் மட்டும் செல்லவில்லை என்பதை நாம் வலியுறுத்த வேண்டியது அவசியமாய் உள்ளது; அவர் மற்றவர்களை யும் தம்முடன் அழைத்துச் சென்றார் (30:2, 3). தாவீது தம்மைச் சுற்றிச் சூழ்ந்து நின்றிருந்த அறுநூறு மனிதர்களைத் தம்முடன் அழைத்துச் சென்றிருந்தார். அவர்கள் அவரிடத்தில் வந்தபோது, ஒன்றுமே இல்லா திருந்த பல்வகைப்பட்டவர்களின் கூட்டமாக இருந்தார்கள், அவர்களை அவர், தாம் எங்கு சென்றாலும் தொடர்ந்து பின்பற்றி வரக் கூடிய நெருங்கிப் பிணைக்கப்பட்ட கொரில்லா வீரர்களாக உருவாக்கியிருந்தார் (2 சாமு. 23:13-17). அவர்களின் குடும்பங்களையும் தாவீது தம் சொந்தக் குடும்பத்துடன் அழைத்துச் சென்றார். மற்றும், தாவீதின் நற்பெயர் வளர்ந்து வருகையில், அண்மையில் இருந்த இஸ்ரவேலின் கோத்திரங்களில் இருந்து[25] சிக்லாகிற்கு அவரிடம் வந்தார்கள். புறதெய்வ வணக்கம் கொண்டிருந்த சமூகத்தில் வாழ்வதினால் ஏற்படும் சோதனைகளுக்கு ஆட்படுதல் என்பது தொடக்க விளைவாக இருந்தது. கடைசியில், பெண்களும் பிள்ளைகளும் பிடிக்கப்பட்டார்கள், ஆண்கள் அழிவுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

*தூர தேசத்திற்குச் செல்லுகின்றவர்களில் பெரும்பான்மையானவர்கள், தங்களைப் பற்றியும் தங்கள் விருப்பங்களைப் பற்றியும் மட்டுமே நினைக் கின்றார்கள். "நான் செய்கிறது என் சொந்த வேலையாகும், இது வேறு எவரையும் பாதிக்காது'' என்று அவர்கள் நினைக்கின்றார்கள். அது எப்பொழுதுமே பிறரை பாதிக்கின்றது. ஊதாரி மகன் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றபோது, இருதயம் உடைந்து போன ஒரு தந்தையை அவன் பின்வைத்துச் சென்றான். நீங்கள் தூர தேசத்திற்குச் செல்லுகின்ற போது, எல்லாவற்றையும் இடர்ப்பாட்டிற்கு உட்படுத்துகின்றீர்கள். நீங்கள் உங்கள் சொந்த ஆத்துமாவை மட்டுமின்றி, உங்களுடன் நெருக்கமாயிருப் பவர்களின் ஆத்துமாக்களையும் இடர்ப்பாட்டிற்கு உட்படுத்துகின்றீர்கள். தாவீதைப் போல் உங்களுக்கு ஒரு குடும்பம் இருந்தால், அந்தக் குடும்பத்தை நீங்கள் இடர்ப்பாட்டிற்கு உட்படுத்துகின்றீர்கள். இறுதியில் "இது என் குடும்பத்திற்கும் என் நண்பர்களுக்கும் என்ன செய்யும்?" என்ற கேள்வியை நேர்மையுடன் எதிர்நோக்க வேண்டும் என்ற காரணத்தினால், பலர் தூர தேசத்திற்குச் செல்லும் தங்கள் பயணத்தை இரத்து செய்துள்ளார்கள்.*

*தூர தேசத்திற்குச் செல்லுதல் என்பது என்ன விதமான தற்காலிக நிம்மதியை வழங்கினாலும், கடைசியில் அந்த நிம்மதிக்கு மிக உயர்ந்த விலை செலுத்த வேண்டியதாகின்றது. மிகச் சிறந்த வழியொன்று உள்ளது - தேவனுடன் நிலைத்திருந்து அவரை முற்றிலுமாக நம்பியிருக்கக் கற்றுக் கொள்ளுதலே அந்த வழியாக உள்ளது.*

## தேவனிடத்திற்கு மீளக்கட்டியெழுப்பப்படுதல்
## *(1 சாமுவேல் 30:6-31)*

*நம்மை மல்லாந்து விழச் செய்வதற்காக அல்ல ஆனால் நம்மை முழந்தாளிடச் செய்வதற்காகவே, தேவன் நம் வாழ்வில் துன்பங்கள் வர அனுமதிக்கின்றார். நாம் முழந்தாளில் இருக்கின்ற பொழுது, கடைசியில் நாம் எழுந்து நின்று விட முடியும். அறுநூறு மனிதர்கள் தங்கள் கைகளில் கற்களுடன் தாவீதைச் சுற்றி நின்ற வேளையில், தாவீது பெருந்துன்பத்தின் ஆழங்களுக்குச் சென்றபோது, தாவீதின் வாழ்வில் இதற்கு முற்பட்ட ஒன்றரை ஆண்டுகள் வரையிலும் பதிவு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப் படாத சிலவற்றை நாம் காண்கின்றோம்: தேவனுடைய நாமம். 30:6ன் முடிவில், "தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப் படுத்திக்கொண்டான்" என்று நாம் வாசிக்கின்றோம். இதற்கு முன்பு, தாவீது ஊக்கமிழந்திருந்த வேளையில், யோனத்தான் "தேவனுக்குள் அவரை உற்சாகப்படுத்தியிருந்தார் [நேர்ப்பொருளில், அவரது கையைத் திடப் படுத்தியிருந்தார்]'' (23:16). இப்பொழுது தாவீதிடத்தில் யோனத்தான் இல்லை,[26] ஆனால் அவர் தமக்குள்ளாகவே ஆழமாகச் சென்று தேவனால் மட்டுமே தரக்கூடிய பலத்தைக் கண்டறிந்தார் (எபே. 3:20).*

*தாவீது தேவனிடத்திற்குத் திரும்பியபோது, விஷயங்கள் மேன்மை யானவைகளாகக் காணப்படத் தொடங்கின. அவரும் அவரது மனிதர்களும் அவர்களின் குடும்பத்தவர்கள் எவரின் உடல்களையும் காணாதபடியால்,*

*அவர்களின் குடும்பத்தவர்களும் அநேகமாக உயிருடன் இருக்கலாம்.[27] மற்றும், தாவீதும் அவரது படையினரும் இன்னமும் உயிருடன் இருந்தார் கள், அவர்கள் அமலேக்கியர்களைப் பின்தொடர முடியும். அவர்களுக்கு இன்னமும் நம்பிக்கை இருந்தது. பின்பு தாவீது, தாம் பெலிஸ்தியாவுக்கு வருவது பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்த வேளையில் செய்ய வேண்டிய தாயிருந்த ஒரு செயலை இப்போது செய்தார்: அவர் "கர்த்தரிடத்தில் விசாரித்தார்" (30:7, 8). அவர் கர்த்தரை நோக்கி, "நான் அந்தத் தண்டைப் பின்தொடர வேண்டுமா? அதைப் பிடிப்பேனா?" என்று கேட்டார். அதற்கு அவர், "அதைப் பின் தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்" என்றார் (30:8). தாவீதின் இருதயத்தில் இருந்த நம்பிக்கை நிச்சயமானதாயிற்று.*

*செயல்படும்படியான அழைப்பானது, முகாமில் கட்டியெழுப்பியிருந்த வெறுப்புணர்விற்கு சரியான எதிர்மருந்தாயிருந்தது. அந்த மனிதர்கள் தங்கள் கற்களைக் கீழே போட்டுவிட்டு, தங்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு, தெற்கு நோக்கித் தாவீதுடன் செல்லத் தொடங்கினார்கள். ஆயினும், அந்த மனிதர்கள் சக்தியை இழந்து போயிருந்தார்கள். விரைவிலேயே இருநூறு பேர் (சக்தியற்று) விழுந்தார்கள். நின்று போயிருத்தல் என்பது தாவீதுக்குச் சுலபமானதாக இருந்திருக்கும். அவரும் மற்றவர்களும் பலம் குன்றிப் போகுதலில் இருந்தார்கள். அவர்களின் பொருட்கள் ஏறக்குறைய வெறுமையாகி விட்டிருந்தன (அவர்களின் பொருட்களின் ஏற்பட்டிருந்த குறைவை நிறைவாக்க சிக்லாகில் ஒன்றும் விட்டு வைக்கப்பட்டிருக்கவில்லை). அமலேக்கியர்கள் எங்கிருந்தார்கள் என்று கூடத் தாவீது அறியாதிருந்தார்; ஆனால் அவர் தேவன் மீது கொண்டிருந்த விசுவாசத்தின் காரணமாக, எஞ்சியிருந்த நானூறு பேருடன் தொடர்ந்து முன் சென்றார்.*

*அவரது விசுவாசத்திற்கு வெகுமதியளிக்கப்பட்டது. அவர்கள், தனது அமலேக்கிய எஜமானனால் கைவிடப்பட்டு விட்டுச் செல்லப்பட்டிருந்த ஒரு எகிப்திய அடிமையைக் கண்டார்கள். அவர்கள் (தாவீதும் அவரது மனிதர்களும்) அவனுக்கு உலர்ந்த பழங்களையும் தண்ணீரையும் கொடுத்துப் புத்துயிர் பெறச் செய்தார்கள். தேவனுடைய அருளிரக்கத்தின் மூலமாக அந்த அடிமைக்கு, அமலேக்கியர்கள் தங்கள் வெற்றியைக் கொண்டாட எங்கு சென்றிந்தார்கள் என்பது தெரிந்திருந்தது, அவன் இஸ்ரவேலர்களை அவர்களிடத்தில் அழைத்துச் சென்றான். (இது அவனைப் பாதுகாப்பதாகத் தாவீது உறுதி அளித்த பின் நடைபெற்றது.)*

*அமலேக்கியர்கள், தாங்கள் பத்திரமாயிருப்பதாக நினைத்துக் கொண்டு தங்களைத் தாக்குதலுக்கு ஏதுவானவர்களாய் விட்டு வைத்திருந்தார்கள். அவர்கள் இரவு முழுவதும் விருந்து கொண்டாடினார்கள். உணவையும் (மது) பானத்தையும் பேராவலுடன் உட்கொண்டு வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்தார்கள். தாவீதும் அவரது மனிதர்களும் அதிகாலை வரையிலும் ஓய்ந்திருந்தார்கள்.[28] பின்பு, விரோதிகள் உண்ட மயக்கத்தில் இருந்த வேளையில், அவர்களை இவர்கள் முற்றிலுமாக அழித்தார்கள். அமலேக்கியர்கள் இவர்களைக் காட்டிலும் அதிகமான எண்ணிக்கையில்*

*இருந்தாலும்,[29] தங்கள் குடும்பங்களை மீட்கும்படிப் புறப்பட்டிருந்த இந்தக் கசப்பான மனிதர்களுக்கு அவர்கள் சுலபமான இரையாக இருந்தார்கள். தாவீது விரோதியை மேற்கொண்டு "சகலத்தையும் திருப்பிக்கொள்வார்" என்று தேவன் அவரிடம் கூறியிருந்தார் - தாவீது அதையே செய்தார்.*

> *அமலேக்கியர் பிடித்துக்கொண்டுபோன எல்லாவற்றையும், தன்னுடைய இரண்டு மனைவிகளையும் தாவீது விடுவித்தான். அவர்கள் கொள்ளையாடிக் கொண்டுபோன எல்லாவற்றிலும், சிறியதிலும், பெரியதிலும், குமாரரிலும், குமாரத்திகளிலும், ஒன்றும் குறைபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக்கொண்டான் (30:18, 19).[30]*

*தாவீதைக் கல்லெறியத் தயாராயிருந்த மனிதர்கள் இப்போது மாறுபட்ட ஒரு இராகத்தில் பாடினார்கள். அவர்கள் இதைத் தாவீதின் வெற்றி என்பதாகக் கண்டு, "இது தாவீதின் கொள்ளை" (30:20) என்று சத்தமிட்டார்கள். ஆயினும் தேவனே அந்த வெற்றிக்குப் பொறுப்பாளராயிருந்தார் என்று தாவீது அறிந்தார். அவர், "என் சகோதரரே, கர்த்தர் நமக்குத் தந்ததை நீங்கள் இப்படிச் செய்ய வேண்டாம்; கர்த்தர் நம்மைக் காப்பாற்றி, நமக்கு விரோதமாய் வந்திருந்த அந்தத் தண்டை நம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார்" (30:23) என்று கூறினார். அவர், யுத்தத்திற்குச் செல்ல முடியாமல் (இரஸ்துக்களண்டையில்) இருந்தவர்களுடனும்,[31] தெற்கு யூதேயாவின் நகர்களில் இருந்தவர்களுடனும்[32] அந்தக் கொள்ளைப் பொருள்களைப் பங்கிட்டுக் கொண்டார்.*

*தாவீதுக்குத் தேவைப்பட்டபோது தேவன் அவருடன் இருந்தார். இவ்விடத்தில் நாம் மீண்டும் மீண்டும் கேள்விப்பட வேண்டிய சத்தியம் ஒன்றுள்ளது: நமது தேவன் இரண்டாவது வாய்ப்பின் தேவனாக இருக்கின்றார். ஊதாரி மகன் திரும்பி வந்தபோது, அவனைச் சந்திக்க ஓடோடிப் போய் அவன் கழுத்தை கட்டி, முத்தம் செய்த தந்தையைப் போல, தேவன் தமது அன்பார்ந்த மற்றும் பாதுகாக்கின்ற புயங்களுக்குள் தாவீதை மீண்டும் மூடிக் கொண்டார். தாவீது மீண்டும் ஆவிக்குரிய தட (கள) த்தினுள் வந்தார்.*

*தேவன் நமக்குத் தேவைப்படும் வரை நாம் அவரைப் புறக்கணித்து விடலாம் என்றும், நாம் அவர் பக்கம் திரும்பும்போது அவர் தாமாகவே நம்மை ஆசீர்வதிப்பார் என்றும் யாரேனும் நினைப்பதற்காக நான் இதைக் கூறவில்லை. இல்லை, கைவிட்டுச் செல்லுதலின் அபாயங்கள் குறித்து வேதாகமம் மிகத் தெளிவாக உள்ளது (எபி. 6:4-6; 10:23-31; முதலியன). மாறாக, தம்மை தூர தேசத்தில் இருக்கிறவராகக் கண்டு, திரும்பிச் செல்ல மிகவும் தாமதமாயிற்று மற்றும் நம்பிக்கையே இல்லை என்று நினைக்கின்றவர்கள் எவரையும் உற்சாகப்படுத்துவதற்காகவே நான் இதைக் கூறுகின்றேன். தேவனிடத்திற்குத் திரும்பி வாருங்கள். "புத்தி தெளிந்த" ஊதாரி மகனைப் போல் (லூக். 15:17), உங்கள் வாழ்வில் உள்ள பாவங்களை அறிக்கையிடுங்கள், அதிலிருந்து மனந்திரும்புங்கள் (லூக். 15:17-19, 21), மற்றும் இல்லத்திற்குத் திரும்புங்கள். தேவன் உங்களை மீண்டும் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கின்றார்!*

# இல்லம் திரும்புதல்
# (2 சாமுவேல் 2:1-4)

*தாவீது பின் புல்வெளியில் யாராலும் அறியப்படாதவராக உயிர் பிழைத்துக் கொண்டிருந்தார்; அவர் கோலியாத்தைக் கொன்ற பின் தம் மகிமையுள்ள நாட்களில் உயிர் பிழைத்திருந்தார்; அவர் பத்து ஆண்டுகளாக தேடப்பட்டவராக உயிர் பிழைத்திருந்தார். அவர் இன்றியமையாத பாடங்களைக் கடினமான வழியில் கற்றறிந்திருந்தார். அவர் ''கடினமான குத்துக்களின் பள்ளியில்'' இருந்து மதிப்புமிக்க பட்டங்களைப் பெற்றிருந்தார். அது, அவர் ராஜாவாகக்கூடிய நேரமாயிருந்தது. அது அவர் இல்லம் திரும்ப வேண்டிய நேரமாயிருந்தது.*

*2 சாமுவேல் தொடங்குகையில், தாவீதும் அவர் மனிதர்களும் மற்றும் அவர்களின் குடும்பங்களும் சிக்லாகிற்குத் திரும்பி வந்திருந்தார்கள்.[33] அவர்கள் அங்கு இரண்டு நாட்கள் இருந்தார்கள், அப்பொழுது அவர்கள், மீளக்கட்டியெழுப்பும் திட்டத்துடன் அங்கிருந்த குப்பையிலிருந்து எதையாவது மீட்க முடியுமா என்று அவர்கள் தோண்டிப் பார்த்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. மூன்றாம் நாளில், அவர்களின் முகாமிற்குள் ஒரு அமலேக்கியன்[34] தடுமாறிக் கொண்டே வந்தான். அவன், தான் யுத்தகளத்தில் இருந்து வந்ததாகவும், சவுலும் யோனத்தானும் இறந்துபோனதாகவும் சொன்னான்.[35] தாவீதும் அவரது மனிதர்களும் இருதயம் உடைந்தவர்கள் ஆனார்கள். தாவீது, சவுலுக்காகவும் யோனத்தானுக்காகவும், "பராக்கிரமசாலிகள் எப்படி விழுந்து போனார்கள்!" என்ற பாடக் கருத்தில் புலம்பல் பாடல் ஒன்றை எழுதினார்.*

*சவுலின் மரணம், தாவீதுக்கு இரண்டு கதவுகளைத் திறந்து வைத்தது. முதலாவது, இது சுதந்திரத்திற்கான கதவைத் திறந்து வைத்தது. சவுல் இறந்துள்ள நிலையில், தாவீது தமது மக்களுடன் ஓடிக் கொண்டிருப்பதை நிறுத்தி தன் மக்களிடத்திற்குத் திரும்ப முடிந்திருந்தது. இரண்டாவது, இது அரண்மனையின் கதவைத் (தாவீதுக்கு) திறந்து வைத்தது. தாவீது இப்பொழுது ஒரு ராஜாவாக முடியும். அவர் பழைய தாவீதாக இருந்திருந்தால், ''கர்த்தர் இதை வாய்க்கச் செய்தார் என்பதில் ஐயம் இல்லை'' என்று கூறிவிட்டு எவ்விதத் தயக்கமும் இல்லாமல் இல்லம் நோக்கிச் சென்றிருப்பார். (ஆனால்) தூர தேசத்தில் உயிர்பிழைத்திருந்த (இந்தப் புதிய) தாவீது, "எனக்கான தேவனுடைய சித்தம் என்ன என்பதை ஆராய்ந்து நிச்சயித்துக் கொள்வேன்'' என்று கூறினார். இது தாவீது தேடப்பட்டவராக வாழ்ந்த தமது ஆண்டுகளில் கற்றுக் கொண்ட மிக முக்கியமான பாடமாயிருந்திருக்கலாம். இது அவரை, தேவனுடைய மக்களின் தலைவராக இருக்கும்படி தயார் செய்தது.*

> *பின்பு தாவீது கர்த்தரை நோக்கி: "நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா" என்று விசாரித்தான். அதற்குக் கர்த்தர்: ''போ'' என்றார்; ''எவ்விடத்திற்குப் போகலாம்'' என்று தாவீது கேட்டதற்கு, அவர்: "எப்ரோனுக்குப் போ" என்றார். அப்படியே தாவீது தன் இரண்டு மனைவிகளோடும் ... கூட அவ்விடத்துக்குப்*

*போனான். அன்றியும் தன்னோடிருந்த மனுஷரையும், அவர்கள் குடும்பங்களையும் கூட்டிக்கொண்டுபோனான்; அவர்கள் எப்ரோனின் சுற்றூர்களிலே குடியேறினார்கள் (2:1-3).*

*எப்ரோன் என்பது, தாவீது வெகுமதிகள் அனுப்பியிருந்த நகர்களில் ஒன்றாக இருந்தது (1 சாமு. 30:31), அந்த நகரம் அவரது முதல் தலைநகராகும். கடைசியில் தாவீது தூர தேசத்தில் இருந்து இல்லம் வந்து சேர்ந்தார்.*

## முடிவுரை

*ஊதாரி மகன் இல்லம் திரும்பி, தனது தந்தையின் வீட்டாரால் திரும்பவும் ஏற்றுக் கொள்ளப்பட்டான். தாவீது இல்லம் திரும்பினார் - தேவன் அவரை ராஜாவாக ஏற்படுத்தினார் (2 சாமு. 2:4). நீங்கள் தூர தேசத்தில் இருந்தால், இவர்களின் உதாரணங்கள் இன்றே உங்களை இல்லம் திரும்ப உற்சாகப் படுத்தும் என்று நான் நம்புகின்றேன்.*

*தூர தேசத்திலிருந்து இல்லம் (திரும்பி) வந்து சேர்வதைக் காட்டிலும் - முதலில் அங்கு செல்லாமலே இருப்பது என்பது - மிக மேன்மையான விஷயமாக உள்ளது. நீங்கள் அந்த தூர தேசம் செல்லும்படி சோதிக்கப் பட்டால், ஊதாரி மகனுக்கும் தாவீதுக்கும் நேர்ந்தவைகள், நீங்கள் மறு ஆலோசனை செய்யக் காரணமாகும் என்று நான் நம்புகின்றேன். இவர்களைப் போலவே ஒவ்வொருவரும் திரும்பி வந்து விடுவதில்லை. அந்த நிலத்தின் மேற்பரப்பு, ஒருக்காலும் திரும்பி வராதவர்களின் ஆவிக்குரிய சடலங்களால் மூடப்பட்டுள்ளது.*

*உங்களை நீங்கள் தூர தேசத்தில் இருக்கக் கண்டால், “மனந்திரும்பி ... வேண்டிக்கொள்; தேவனிடத்திற்கும் அவரது மக்களிடத்திற்கும் திரும்பி வாருங்கள்” என்பதே உங்களுக்குத் தேவனுடைய வசனமாயிருக்கிறது (அப். 8:22; யாக். 5:16) உங்களால் முடியும் போதே இதைச் செய்யுங்கள்! இதற்கு மாறாக, நீங்கள் தூர தேசத்திற்குப் போகும் எண்ணத்துடன் சாகசம் செய்து கொண்டிருந்தால், நின்று உங்கள் செயல்களின் விளைவுகள் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். பின்பு போகாதிருங்கள்!*

---

## பிரசங்கக் குறிப்புகள்

*இந்தப் பகுதியில் உள்ள பாடக் கருத்துக்கள் “விரோதியின் எல்லை களில் வாழுதல்” என்ற மிகவும் தேவையான பாடத்தைப் போதிக்கப் பயன் படுத்தப்பட முடியும். தாவீது விரோதியின் எல்லைப் பகுதிக்குச் சென்றார்; நாம் “இப்பிரபஞ்சத்தின் தேவன்” (2 கொரி. 4:4) என்பவனால் அதிகாரம் செலுத்தப்படும் எல்லைப்பகுதியில் பிறந்திருக்கின்றோம். நாம், “இவ்வுலகம் நமது இல்லம் அல்ல; நாம் இதில் கடந்து செல்லுகிறவர்களாய் இருக்கின் றோம்” (எபி. 11:9, 10; 1 பேது. 2:11; முதலியன) என்பதைப் புரிந்து கொள்வது அவசியமாக உள்ளது. நாம் “மரணபரியந்தம்” சாத்தானுடன்*

*போராட்டத்தில் இருக்கிறோம் (இ.வ. எபே. 6:11, 12). தாவீதின் வாழ்வின் இந்தக் காலகட்டமானது, விரோதியின் எல்லைப் பகுதிகளில் வாழ்வது எப்படி என்பது பற்றி நமக்குச் சில குறிப்புகளைத் தரக் கூடும்: (1) ஒருக்காலும் அதைப் பற்றி ஐயப்படாதீர்கள்; நாம் விரோதியின் எல்லையில்தான் வாழ்ந்து கொண்டுள்ளோம். (2) இது உங்களைச் சுற்றிலும் ஒரு திடமான ஆதரவுக்குழுவை வைத்துக் கொள்ள உதவுகின்றது. (3) விஷயங்கள் மோசமாகும்போது கூட, அது மிகவும் மோசமாகக் கூடும் என்பதை நினைவில் வையுங்கள். (4) தடங்கல்கள் வரும், ஆனால் தேவன் மீதும் உங்கள் வாழ்வுக்கான அவரது நோக்கத்தின் மீதும் கவனம் செலுத்துங்கள். (5) இதை ஒருக்காலும் மறவாதீர்கள்: மேன்மையான நாட்கள் வருகின்றதாயிருக்கின்றன (தாவீதின் முடி சூடுதலும் - நாம் நித்திய ஜீவகிரீடத்தைப் பெறுதலும்)!*

---

*குறிப்புகள்*

*[1]பெலிஸ்தியாவில் தாவீது வாழ்ந்த காலத்தின் அளவு தொடக்கத்தில் தோன்றுவதுபோல் திட்டவட்டமானதாக இருப்பதில்லை. 1 சாமுவேல் 27:7ன் மூலமொழிநடையானது "நாட்களும் நாலு மாதமும்" என்றுள்ளது, இது "ஒரு வருஷமும் நாலு மாதமும்" என்ற அர்த்தம் கொண்டிருக்கலாம், ஆனாலும் அதை விட நீண்ட கால அளவைக் குறிப்பதாகவும் இருக்கலாம். மேலும் வசனம் 7, இந்த வரலாற்றில் தாவீது சிக்லாகில் வாழ்ந்திருந்த காலத்தை மட்டும் இது குறிப்பதாய் இருக்கலாம் அல்லது இது தாவீது சிக்கலாகிற்கு வருவதற்கு முன் காத் நகரில் இருந்த காலத்தை அல்லது இந்த இடத்தில் இருந்து சவுலின் மரணம் வரையிலுமான காலகட்டத்தை உள்ளடக்காது இருக்கலாம். இருப்பினும், நாம் ஹிபுறீயயைப் பயன்படுத்துவதால், தாவீது பெலிஸ்தருடன் பதினாறு மாதங்கள் வாழ்ந்திருந்தார் என்ற கருத்தே பயன்படுத்தப்படும். [2]இந்த நகரங்கள் யூதா கோத்திரத்தின் சுதந்தரத்தினுடைய பாகங்களாயிருந்தன (இ.வ. யோசு. 13:3). யூதா கோத்திரத்தார், மூன்று நகரங்களையும் அவர்களின் மலையோர எல்லைப் பகுதிகளையும் கைப்பற்றியிருந்தார்கள் (நியா. 1:18, 19), ஆனால் யூதா கோத்திரத்தார், பெலிஸ்தர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த சமவெளிப் பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவோ அல்லது நகரங்களில் குடியிருந்த பெலிஸ்தர்களை விரட்டவோ ஒருக்காலும் கூடாது போயிற்று (நியா. 1:19). விரைவிலேயே ஐந்து நகரங்கள் மீண்டும் பெலிஸ்தரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன (நியா. 3:1 முதல்). [3]இ.வ. 1 சாமுவேல் 5:1, 2. இருப்பினும் பெட்டியானது அவர்களுக்கு சொல்லொண்ணாத துன்பத்தைக் கொடுத்தபடியால், பெலிஸ்தர்கள் அதை விரைவிலேயே தங்கள் நாட்டில் இருந்து வெளியேற்றிவிட்டார்கள் (1 சாமு. 6). [4]தாவீது அறுநூறு பேருக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உணவளிப்பதற்கு இன்னும் சிறந்த வழி தேவைப்பட்டது என்றும் ஆலோசிக்கப்படுகின்றது. இந்தப் பொறுப்பானது தாவீதுக்கு அதிகம் மன இறுக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும், ஒருவேளை இது அவர் சிந்தனையின் மையமாய் இருந்திருக்கும். ஆயினும் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட சிந்தனைகளின்படி, தாவீது தம்மை மட்டும் குறிப்பிட்டு, சவுலிடத்தில் இருந்து தப்பிக்க வேண்டும் என்ற தமது விருப்பத்தை மட்டும் வெளிப்படுத்தினார்.* [5]Kenneth Barker, gen. ed., *The NIV Study Bible* (Grand Rapids, Mich.: Zondervan, 1985), 415. *[6]பல விளக்கவுரையாளர்கள், தாவீதும் ஆகீசும் ஒரு ஒப்பந்தம்*

*ஏற்படுத்திக் கொண்டதாகவே நினைக்கின்றார்கள்: தாவீது தமது கொள்ளைகள் பற்றி ஆகீஸ் அரசனுக்கு அறிக்கை தர வேண்டும் மற்றும் அவற்றில் பங்கையும் அளித்து வரும் வரையிலும் சிக்லாகில் இருக்கலாம். [7]இது இயற்கைக்கு அப்பாற்பட்டது என்று உரிமைகோரது, இயற்கையான வழிமுறைகளினால் செய்யப்படுகிற "கேளிக்கை மாயவித்தை" என்பதாக இருக்கின்றது. [8]தாவீது கொள்ளையிட எங்கு சென்றார் என்பதை ஆகீஸ் அறியாமல் இருக்க வேண்டும் என்பது முதன்மை நோக்கமாயிருந்ததாகக் காணப்படுகின்றது (1 சாமு. 27:11ஐக் காணவும்). [9]எழுத்தாளர் கூடுதலான ஒரு விளக்கவுரையையும் கொடுத்தார்: "அதினிமித்தம் சிக்லாக் இந்நாள் வரைக்கும் யூதாவின் ராஜாக்களைச் சேர்ந்திருக்கிறது" (1 சாமு. 27:6). இந்த விளக்கம் மூல வசனத்தின் பாகமாய் இருந்தது என்றால், இப்புத்தகத்தின் இந்தப் பகுதியானது சில ஆண்டுகளுக்குப் பின்பு அதன் நிறைவு வடிவம் பெற்றது என்று இது நமக்குக் கூறலாம். [10]சிக்லாக் என்பது பெலிஸ்தியா மற்றும் இஸ்ரவேல் நாடுகளின் எல்லையோரப் பகுதியில் மலையடிவாரத்தில் இருந்த ஒரு சிறு நகர் ஆகும். இது தொடக்கத்தில் சிமியோன் கோத்திரத்தாருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது (யோசு. 19:5), ஆனால் பின்பு இது யூதாவின் பாகமாயிற்று (யோசு. 15:31). இதைப் பெலிஸ்தர் யூதா கோத்திரத்தாரிடம் இருந்து கைப்பற்றியிருந்தார்கள் என்பது உறுதி. இது இருந்த இடம் பற்றிய தகவலை நாம் உறுதியாய் அறிவதில்லை.*

*[11]யோசுவா 13:2ஐக் காணவும். இவர்களை, யோர்தானின் கிழக்குப் பகுதியில், வடக்கு கானான் நாட்டில் வாழ்ந்த கேசூரியர்கள் (2 சாமு. 15:8) என்று நினைத்துக் குழப்பிக் கொள்ளக் கூடாது. [12]இந்த சத்தியமானது, வேதவசனங்களில் (தாவீதின்) கொள்ளையைப் பற்றி 1 சாமுவேல் 30ல் தரப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் அதைத் தொடர்ந்து அமலேக் கியர்களைப் பற்றிய குறிப்புகள் ஆகியவற்றில் இருந்து தெளிவாகின்றது. அமலேக் கியர்களின் அரசனைத் தவிர மற்ற எல்லாரையும் சவுல் கொன்றிருந்தால் (1 சாமு. 15:7-9) பின்பு எப்படி அவர்கள் இவ்வளவு திரளாகப் பெருகியிருக்க முடிந்தது? சூருக்குப் போகும் எல்லை மட்டும் இருந்த அமலேக்கியர்களையே சவுல் கொன்றிருந்தார் என்பது உறுதி (1 சாமு. 15:7). ஒருவேளை தேவன் சவுலுக்கு இந்த இனத்தாரின் ஒரு பகுதியினரைக் குறித்து மட்டும் கட்டளையிட்டு இருந்திருக்கலாம். [13]அமலேக்கியர்கள் யாத்திராகமத்தின் காலத்தில் இருந்து (யாத். 17:8-16) எசேக்கியா அரசரின் ஆட்சிக் காலம் வரையிலும் (1 நாளா. 4:41, 43) இஸ்ரவேலர் களின் விரோதிகளாய் இருந்தார்கள். [14]இந்தப் பகுதியானது நாட்டின் தென்பகுதியாய் இருந்தபடியினால், "Negev" என்பது (இவ்விடத்தில் ஆங்கில வேதாகமத்தில் இவ்வாறு உள்ளது) "தென்பகுதியில்" என்று(ம்) அர்த்தமாக வரக்கூடும், இது சில வேளைகளில் "தெற்கு" என்றும் மொழிபெயர்க்கப்படுகின்றது. [15]இந்த பாடத்தில், 1 சாமுவேல் 28:3, 5-25 பகுதியானது கலந்துரையாடப் படுவதில்லை. கர்த்தருக்குச் சித்தமானால், நாம் சவுலைப் பற்றிய ஒரு தொடர் பாடத்தில் இப்பகுதிக்குத் திரும்புவோம். [16]"எபிரெயர்" என்பது இஸ்ரவேலர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தும் சொற்றொடர்களில் ஒன்று ஆகும். இந்த வார்த்தையின் உண்மையான அர்த்தம் குறித்து விவாதம் உள்ளது. பெலிஸ்தர்களின் வாய்களில் இந்த வார்த்தையானது ஒரு கேலிக் கூத்தாகவே இருந்திருக்கலாம். இஸ்ரவேலர்களே கூட, "இஸ்ரவேலர்கள்" என்ற வார்த்தையைத்தான் பெரிதும் விரும்பினர், இது அவர்களுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவுபடுத்துவதாயிருந்தது. இருப்பினும், அவர்கள் பேசிய மொழி "எபிரெய" மொழி என்று அழைக்கப்பட்டது. [17]மூல மொழியில் "நாட்களும் ஆண்டுகளும்" என்றுள்ளது, இது ஒரு குழப்ப மிக்க சொற்றொடராகும். இது பல ஆண்டுகள் அல்லது வெறுமனே "ஒன்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகள்"*

*என்பதைக் குறிப்பிடக் கூடும், இது 1 சாமுவேல் 27:7ன்* NASB *மொழிபெயர்ப்பான "ஒரு ஆண்டும் நான்கு மாதங்களும்" என்பதில் பொருந்தக்கூடும்.* NIV *யில் "ஒரு ஆண்டிற்கும் மேலாக" என்றுள்ளது;* NEB *யில் "ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள்'' என்றுள்ளது.* [18]*அவர்கள் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குப் பின்பு இன்னமும் அந்தப் பாடலை நினைவில் வைத்திருந்தார்கள்: "தாவீது கொன்றது பதினாயிரம்" (1 சாமு. 29:5). இதற்கு முந்திய ஒரு நிகழ்வில், பெலிஸ்தியாவில் இருந்த இஸ்ரவேலர்கள் யுத்தம் மும்முரமாய் நடந்த வேளையில் அவர்களுக்கு (பெலிஸ்தியர்களுக்கு) எதிராகத் திரும்பியிருந்தார்கள் (1 சாமு. 14:21); அது போல் மீண்டும் நடக்க வாய்ப்பளிப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை. சவுலின் நன்மதிப்பைப் பெறுவதற்காகத் தாவீது யுத்தத்தின் போது கட்சி மாறி விடக்கூடும் என்று அவர்கள் நினைத்தார்கள்.* [19]*ஆகீஸ் தனது வார்த்தைகளில் "கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு ..." (1சாமு. 29:6) என்ற திகைப்புக்குரிய சொற்றொடரைப் பயன்படுத்தினார். இவ்விடத்தில், ''கர்த்தர்'' என்பது ''யெகோவா'' அல்லது "யாவே"யைக் குறிக்க நிற்கின்றது, இது தேவனுடைய பரிசுத்தமான பெயராக உள்ளது. ஒருவேளை ஆகீஸ், தாவீதின் தேவனுடைய பெயரைப் பயன்படுத்துவதன் மூலமாகத் தனது வார்த்தைகளை மென்மைப்படுத்த முயற்சி செய்திருக்கலாம்.* [20]*ஆகீஸ் 1 சாமுவேல் 29:10ல், ''உன்னோடே வந்த உன் ஆண்டவனுடைய வேலைக்காரரை ..." என்று கூறியதில் இதே விதமான குழப்பச் சொற்றொடரைப் பயன்படுத்தினான். அவன் தன்னையே படர்க்கைப் பெயர்ச் சொல்லில் "ஆண்டவன்" என்று கூறிக் கொண்டானா? சிலர் இவன், தாவீது சிக்லாகில் இருந்த வேளையில் அவருடன் சேர்ந்து கொண்ட இஸ்ரவேலர்களை குறிப்பிட்டான் என்று நினைக்கின்றார்கள் (1 நாளா. 12:19-21), அவர்கள் சவுலின் வேலைக்காரர்களாய் இருந்தார்கள்.*

[21]*1 சாமுவேல் 29:11ல், ''பெலிஸ்தரோவெனில் யெஸ்ரயேலுக்குப் போனார்கள்'' என்று குறிப்பிடப்படுகின்றது. இங்குதான் இஸ்ரவேலர்கள் முகாமிட்டு இருந்தார்கள் (29:1). இஸ்ரவேலர்கள் கில்போவா மலையில் (1 சாமு. 31:1) இளைப்பாறியிருந்தார்கள், இந்த மலையில்தான் சவுலும் யோனத்தானும் மரித்தார்கள் (2 சாமு. 1:21ஐயும் கவனிக்கவும்).* [22]*ஆகீஸ், தாவீதை தேவனுடைய தூதனுக்கு ன்அல்லது செய்தியாளனுக்குதி ஒப்பிட்டான் (1 சாமு. 29:9), இதில் அவன், தாவீது எல்ல வகையிலும் குற்றமில்லா திருந்தார் என்று தான் நம்புவதை வலியுறுத்தினான்.* [23]*1 சாமுவேல் 30:14, 16, 24. கிரேத்தியர்கள் கிரேத்தாத் தீவில் இருந்து வந்தவர்கள் பெலிஸ்தருடன் உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டவர்களா யிருந்தார்கள் (எசே. 25:16; செப். 2:5; முதலியன). "காலேபுடைய தென்புறத்தார்" என்பது எப்ரோனின் தென்பகுதியாயிருக்கும்.* [24]*இவைகள் நாம் வழக்கமாகப் பார்க்கின்ற கொழுத்த, சோம்பேறியான பன்றிகள் அல்ல. இளைத்துப்போன, கத்திமுனைபோல் முதுகு கொண்டவைகளா யிருந்து, ஒரு மனிதனின் கையைக் கடித்து இழுக்கக் கூடிய பன்றிகளை நினைத்துக் கொள்ளுங்கள்.* [25]*1 நாளாகமம் 12:1, 2, 20 வசனங்கள், தாவீது சிக்லாகில் இருந்த வேளையில் பெஞ்சமீன், மனாசே கோத்திரங்களில் இருந்து சிலர் அவரிடத்தில் வந்ததாகக் குறிப்பாகக் கூறுகிறது. அந்த அதிகாரத்தின் வசனம் 22, "அக்காலத்திலே நாளுக்கு நாள் தாவீதுக்கு உதவி செய்யும் மனுஷர் அவனிடத்தில் வந்து சேர்ந்தபடியால், அவர்கள் தேவசேனையைப் போல மகா சேனையானார்கள்" என்று கூறுகின்றது.* [26]*யோனத்தான் தம் உயிரைக் காத்துக் கொள்வதற்காக யுத்த களத்தில் போரிட்டுக் கொண்டிருந்தார்.* [27]*1 சாமுவேல் 30:2ல், ஒவ்வொருவரையும் கொன்ற தாவீதைப் போலின்றி, அமலேக்கியர்கள் ''ஒருவரையும் கொன்று போடாமல்'' தாவீது மற்றும் அவரது மனிதர்களின் குடும்பங்களை உயிரோடே பிடித்துக் கொண்டு போயிருந்தார்கள் என்று நாம்*

*வாசிக்கின்றோம். அமலேக்கியர்கள் அந்தப் பெண்களைக் கற்பழித்து, பின்பு பெண்களையும் சிறுபிள்ளைகளையும் எகிப்பில் அடிமைகளாக விற்கத் திட்டமிட்டு இவ்வாறு செய்திருக்கலாம், ஆனால் தேவன் அவர்களின் உயிரைக் காப்பாற்றினார் என்பதே இங்கு மறைவான கருத்தாக உள்ளது. [28]1 சாமுவேல் 30:17ல் "சாயங்காலம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்த எபிரெய வார்த்தை "உதயம்" அல்லது ''மறைவு'' என்று அர்த்தம் தரக்கூடும். யூதருடைய நாள் சாயங்காலத்தில் தொடங்குவதால், தாவீது சாயங்காலம் தொடங்கி மறு சாயங்காலம் வரையில், அதாவது "அடுத்த நாள் வரையில்" யுத்தம் செய்திருக்கக் கூடும். [29]அந்தப் படையினர் ஆயிரக்கணக்கானவர்களாயிருந்தார்கள் என்பது பின்வரும் உண்மைகளினால் மெய்ப்படுகிறது: (1) அவர்கள் அறுநூறு மனிதர்களின் மனைவிகளையும், பிள்ளைகளையும் கட்டுப்படுத்த முடிந்தது, (2) அவர்களின் எண்ணிக்கையினால், "அவர்கள் வெளியெங்கும் பரவியிருந்தார்கள்" (1 சாமு. 30:16), மற்றும் (3) தப்பிச் சென்றிருந்த நானூறு பேர் (1 சாமு. 30:17) அவர்களில் ஒரு சிறு அளவினராய் மட்டுமே இருந்தார்கள் என்பது மறைமுகமாய் உணர்த்தப்படுகின்றது. [30]இது இஸ்ரவேலைச் சுற்றியிருந்த இனங்களின்மீது தாவீது கொண்டிருந்த முதல் பெரிய வெற்றியாயிருந்தது. நமது பாடத் தொடரில் நாம் காணப் போகிறபடி, கடைசியில் தாவீது இந்த இனங்கள் யாவற்றையும் அடக்கி ஒடுக்கினார்.*

*[31]எண். 31:27 வசனமானது, கொள்ளைப் பொருள் (ரஸ்துக்களண்டையில்) பின்னால் தங்கியிருந்தவர்களுக்கும் பங்கிடப்பட வேண்டும் என்று கட்டளை யிட்டிருந்தாலும் (யோசு. 22:8ஐயும் காணவும்), தாவீதின் படையில் இருந்த சிலர் அந்த இருநூறு பேருக்கும் அவர்களின் மனைவியர் மற்றும் பிள்ளைகளை மட்டும் மீண்டும் தர வேண்டும் என்று கூறினார்கள். பிரமாணத்தை மீண்டும் எடுத்துரைத்த தாவீது அதை அமல்படுத்தி, இவ்விதமாக அதை "கட்டளையும் பிரமாணமுமாக" ஏற்படுத்தினார் (இ.வ. 1 சாமு. 30:25). 30:24ல் நாம், கர்த்தர் நிமித்தமாக ஒரு சிறிது மட்டுமே பணி செய்ய முடியும் என்று நினைக்கின்றவர்களை உற்சாகப்படுத்து வதற்கு நாம் ஒரு மாபெரும் வசனப்பகுதியைப் பெற்றுள்ளோம். [32]1 சாமுவேல் 30:26-31ல் பட்டியலிடப்பட்டுள்ள சில இடங்கள் இன்றைய நாட்களிலும் கண்டறியப்பட முடியும்; மற்ற இடங்களைக் கண்டறிய முடியாது. அங்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுடன், "தாவீதும் அவன் மனுஷரும் நடமாடின எல்லா இடங்களில் இருக்கிறவர்களுக்கும்" என்பது கூட்டப்பட்டிருக்க வேண்டும் (வ. 31), அதாவது, தாவீது தமது ஓட்டத்தில் சென்றிருந்ததாக நாம் கவனித்துள்ள இடங்கள் யாவற்றுக்கும் (அவர் வெகுமதி அனுப்பி வைத்தார்). இந்த வெகுமதிகள் அனுப்பி வைத்ததில் தாவீது பல விஷயங்களை நிறைவேற்றினார்: அவர், கடந்த பத்து ஆண்டுகளாகத் தம்மைப் பாதுகாத்து வைத்திருந்தவர்களுக்கு ''நன்றி'' கூறினார். அவர் பலருடன் உறவை மீண்டும் நிலைநாட்டினார். அவர்களின் விரோதிகள் "கர்த்தரின் விரோதிகளாய்" இருந்தார்கள் என்பதை அவர் வலியுறுத் தினார் (வ. 26), மற்றும் அவர்கள் தமது விரோதிகளாகவும் இருந்ததை அவர் மறைமுகமாய் உணர்த்தினார். இவை யாவும் தாவீதை அரியணைக்குக் கொண்டு வருவதற்கான தேவனுடைய திட்டத்தின் அங்கமாயிருந்தது. [33]1 சாமுவேல் மற்றும் 2 சாமுவேல் ஆகியவை தொடக்கத்தில் ஒரே புத்தக மாகவே இருந்தன. 2 சாமுவேல் புத்தகம் தாவீதின் வரலாற்றைத் தொடர்ந்து கூறுகின்றது. [34]இந்த அமலேக்கியன் வடக்கில் இருந்து வந்ததால், இவன் தனது மனிதர் களுடன் தாவீது சமீபத்தில் நடத்திய யுத்தம் பற்றி அறியாதவனாக இருந்திருப்பான். [35]சவுல் அரசர் படுகாயம் பட்டபின்பு, அவரது வேண்டுகோளுக்கு இணங்க அவரைக் கொன்றதாக இந்த அமலேக்கியன் உரிமைகோரினான். இருப்பினும் 1 சாமுவேல் 31:4 வசனமானது, சவுல் தற்கொலை செய்து கொண்டார் என்று கூறுகின்றது. தாவீதிடம் இருந்து*

வெகுமதி எதையாவது பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் இந்த அமலேக்கியன் அநேகமாகப் பொய் கூறியிருப்பான். இவன் அநேகமாக, சவுல் இறந்த பின் அங்கு வந்து சவுலின் மகுடத்தையும் கடகத்தையும் களவு செய்த துப்புரவுப் பணியாளனாயிருப்பான். இந்த அமலேக்கியன் “கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவரைக் கொன்ற” செயலுக்காக, தாவீது இவனைக் கொல்லுவித்தார், எனவே இந்த அமலேக்கியனின் பொய்யானது இவனுக்கு வெகுமதிக்குப் பதிலாக மரணத்தையே கொண்டு வந்தது.